# செந்தமிழ்

தொகுதி: 92 சனவரி 1998 பகுதி: 1

## திங்கள் இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பொறுப்பாசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் **தமிழண்ணல்**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் **செ. கந்தசாமி**
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **அ. தட்சிணாமூர்த்தி**
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **பழநி. அரங்கசாமி**, தஞ்சாவூர்

பேரறிஞர் **ம.ரா.போ. குருசாமி**
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் **ச. மெய்யப்பன்**
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பேரறிஞர் **சி. கதிர் மகாதேவன்**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் **கு. துரைராசு**
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **அ.அ. மணவாளன்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

பெரும்புலவர் **இரா. இளங்குமரன்**
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேராசிரியர் **ந. பொன்னப்பன்**
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **திருமதி. பத்மா சீனிவாசன்**
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் **ந. மாணிக்கம்**
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரறிஞர் **எஸ்.எம். கமால்**
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் **ஈ.கே. இராமசாமி**
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் **சே. அரிராமநாதன்**
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ: 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் *மா. தனுக்கோடிபாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பொறுப்பாசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# பொருளடக்கம்

1. **எல்லோர்க்கும் தொல்காப்பியம்** *474*
*பேரறிஞர் நா. பாலுசாமி*

2. **கற்பந்தல்** *479*
*பேரறிஞர் அ. மா. பரிமணம்*

3. **கம்பரில் உவமை வளம்** *488*
*பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி*

4. **இலக்கியத்தில் திருச்செந்தூர்** *496*
*பேரறிஞர் வீ. உண்ணாமலை*

5. **தொன்னூல் விளக்கமும் கிலாவிசும்** *500*
*பேரறிஞர் பெ. சுயம்பு*

6. **இயற்கைக் கருவூலங்கள்** *509*
*பொறியாளர் சு.சி. அகமுடை நம்பி*

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## *தொல் - சொல் - பெயரியல்*

*(விரவுப் பெயர்களின் விரிவு)*

### *சூத்திரம் 175*

*அவற்றுள்*

*நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்*
*நான்கென மொழிமனார் சினைமுதல் பெயரே*
*முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே*
*ஏனைப் பெயரே தத்தம் மரபின.*

(ப.ரை) அவற்றுள் - மேலே தொகுத்துக் கூறிய விரவுப் பெயர்களுள், இயற்பெயர் நான்கு - இயற்பெயர்கள் நான்காம்; சினைப் பெயர் நான்கு - சினைப் பெயர்கள் நான்கு; சினை முதல் பெயர் நான்கு - சினை முதற் பெயர்கள் நான்கு, என மொழிம - என்று கூறுவர்; முறைப் பெயர் கிளவி - முறைமை சுட்டிய பெயர்கள், இரண்டு ஆகும் - இரண்டாகும். ஏனை பெயர் - பிற பெயர்கள், தத்தம் - தத்தம், மரபின - இயல்பினவாகும்.

(வி.ரை) இயற்பெயர்கள் நான்கும், சினைப்பெயர்கள் நான்கும், சினை முதல் பெயர்கள் நான்கும், முறைப் பெயர்கள் இரண்டும் ஆகிய பதினான்கும், தத்தம் இயல்பினவாகிய தான், தாம், எல்லாம், நீ, நீயிர் என்னும் ஐந்தும் ஆகப் பத்தொன்பதும் விரவுப் பெயர்களாம். இவற்றின் விரிவு வரும் சூத்திரங்களில் காணலாம்.

## சூத்திரம் 176

(இயற்பெயர்)

*அவைதாம்*

***பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்***
***பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்று***
***அந்நான்கு என்ப இயற்பெயர் நிலையே.***

(ப.ரை.) பெண்மை இயற்பெயர் - பெண்பாலை உணர்த்தும் இயற்பெயரும், ஆண்மை இயற்பெயர் - ஆண்பாலை உணர்த்தும் இயற்பெயரும், பன்மை இயற்பெயர் - பலவின்பால் இயற்பெயரும், ஒருமை இயற்பெயர் - ஒன்றன் பாலை உணர்த்தும் இயற்பெயரும், என்று, இயற்பெயர் நிலை - இயற்பெயரின் வகை, அ நான்கு என்ப - அந்த நான்கு என்று கூறுவர் இலக்கண நூலர்ர்.

(வி.ரை.) இவற்றின் விரிவும் விளக்கமும் 180ஆம் சூத்திரம் முதல் கூறப்படுகின்றன.

## சூத்திரம் 177

(சினைப் பெயர்)

*பெண்மை சினைப்பெயர் ஆண்மை சினைப்பெயர்*
*பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்று*
*அந்நான்கு என்ப சினைநிலைப் பெயரே.*

## சூத்திரம் 178

(சினை முதல் பெயர்)

*பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே*
*ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே*
*பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே*
*ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று*
*அந்நான்கு என்ப சினைமுதற் பெயரே*

## சூத்திரம் 179

(முறைப் பெயர்)

***பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயரென்று***
***ஆயிரண்டு என்ப முறைப்பெயர் நிலையே.***

(ப.ரை) 177,178,179 ஆகிய மூன்று சூத்திரங்களும் 176ஆம் சூத்திரம் போன்றே உரை கொள்ளத்தகும். பொருள் எளிமையானது; வெளிப்படையானது. எனவே பதவுரை வேண்டா.

(வி.ரை.) மேலே கண்ட நான்கு சூத்திரங்களின் விரிவும் விளக்கமும் 180ஆம் சூத்திரம் முதல் கூறப்படும். இச்சூத்திரங்களால் விரவுப் பெயர்கள் பதினான்கு என்பது பெறப்பட்டது. (தனித்துப் பொருள்தரும் ஏனைய ஐந்தும் அல்லாதவிடத்து)

## சூத்திரம் 180

(பெண்மைப் பெயர்)

***பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்***
***ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே***

(ப.ரை) பெண்மை சுட்டிய - பெண்மையைக் குறித்து வரும், எல்லாப் பெயரும் - நான்கு பெயர்களும், ஒன்றற்கும் - அஃறிணை ஒன்றன்பாலுக்கும், ஒருத்திக்கும் - உயர்திணை ஒருத்திக்கும், ஒன்றிய நிலை - பொருந்தும் தன்மையன.

பெண்ணைக் குறித்து வரும் நான்கு பெயர்களும் ஒன்றன் பாலுக்கும் பெண்பாலுக்கும் ஒருங்கே வரும்.

(வி.ரை.) பெண்மை குறித்த நான்கு பெயர்கள் முன் சூத்திரங்களில் கூறப் பெற்றன. அஃதாவது, பெண்மை இயற்பெயர், பெண்மைச் சினைப் பெயர், பெண்மைச் சினை முதற் பெயர், பெண்மை முறைப் பெயர் என்பனவாம். ஒன்று - அஃறிணையில் ஒன்றன்பால்; ஒருத்தி உயர்திணையில் பெண்பால் (ஒருவன் ஆண்பால்)

(எ-டு) அ) சாத்தி வந்தது; சாத்தி வந்தாள் எனவும் (பெண்மை இயற்பெயர்)

ஆ) முடத்தி வந்தது; முடத்தி வந்தாள் எனவும் (பெண்மைச் சினைப் பெயர்)

இ) முடக்கொற்றி வந்தது; முடக்கொற்றி வந்தாள் எனவும் (பெண்மைச் சினை முதற் பெயர்)

ஈ) தாய் வந்தது; தாய் வந்தாள் (பெண்மை முறைப்பெயர்) (சாத்தி, முடத்தி, முடக்கொற்றி,தாய் ஆகியவை விரவுப் பெயர்களாம்)

## சூத்திரம் 181

(ஆண்மைப் பெயர்)

*ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்*
*ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.*

(ப.ரை) ஆண்மை சுட்டிய - ஆண்மையைக் குறித்து வரும், எல்லாப் பெயரும் - நான்கு பெயர்களும், ஒன்றற்கும் அஃறிணையில் ஆண் ஒன்றற்கும், ஒருவற்கும் - உயர் திணையில் ஒருவனுக்கும், ஒன்றிய நிலை - பொருந்தும் தன்மையன.

ஆண்மை குறித்து வரும் நான்கு பெயர்களும் அஃறிணை ஒன்றன்பால் ஆணுக்கும் உயர்திணை ஆண்பாலுக்கும் ஒருங்கே வரும்.

(ப.ரை) நான்கு பெயர்கள் - ஆண்மை இயற்பெயர், ஆண்மைச் சினைப் பெயர், ஆண்மைச் சினை முதற் பெயர், ஆண்மை முறைப்பெயர், ஒன்று - அஃறிணை ஒன்றன்பால்; ஒருவன் உயர்திணை ஆண்பால்.

(எ-டு) சாத்தன் வந்தது; சாத்தன் வந்தான் (ஆண்மை இயற்பெயர்) முடவன் வந்தது; முடவன் வந்தான் (ஆண்மைச் சினைப் பெயர்) முடக்கொற்றன் வந்தது; முடக்கொற்றன் வந்தான் (ஆண்மைச் சினை முதற்பெயர்) தந்தை வந்தது; தந்தை வந்தான் (ஆண்மை முறைப் பெயர்)

## சூத்திரம் 182

(பன்மைப் பெயர்)

*பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்*
*ஒன்றே பலவே ஒருவர் என்னும்*
*என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே*

(ப.உரை) பன்மை சுட்டிய - பன்மையைக் குறித்த, எல்லாப் பெயரும் - மூன்று பெயர்களும், ஒன்று பல ஒருவர் என்னும் - அஃறிணை ஒன்றன்பாலும், அஃறிணைப் பலவின்பாலும், உயர்திணை ஆண்பாலும், என்று இப்பாற்கும் - என்று கூறப்படும் மூன்று பால்களுக்கும் உரியனவாம்.

பன்மையைக் குறித்து வரும் மூன்று பெயர்களும் அஃறிணை ஒருமை, பன்மைகளுக்கும், உயர்திணை ஆணுக்கும் (ஒருமை) வரும்.

(வி.உரை) மூன்று பெயர்களாவன: பன்மை இயற்பெயர், பன்மைச் சினைப் பெயர், பன்மைச் சினை முதற்பெயர்.

(எ-டு) யானை வந்தது, யானை வந்தன (அஃறிணை. இயற்பெயர் ஒருமை, பன்மை)

யானை வந்தான்; யானை வந்தாள் (உயர்திணை ஒருமை)

நெடுங்கழுத்தல் (கழுத்தினையுடையது) வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன (அஃறிணைச் சினைப் பெயர்; ஒருமை, பன்மை)

நெடுங்கழுத்தல் வந்தான், வந்தாள் (உயர்திணைச் சினைப் பெயர், ஆண், பெண்)

பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன } (அஃறிணைச் சினை முதற் பெயர்; ஒருமை, பன்மை)

பெருங்கால் யானை வந்தான் பெருங்கால் யானை வந்தாள் } உயர்திணை ஒருமை (ஆண், பெண்)

(தொடரும்)

# கற்பந்தல்

- பேரறிஞர் அ.மா.பரிமணம்

தமிழில் 'பந்தல்' என்னும் சொல், அகர முதலியின் துணை வேண்டாமலேயே, படித்தவர்களாலும், படியாதவர்களாலும் பொருளுணர்ந்து வழங்கப்பட்டு வரும் ஒன்றாகும். நிழல் தருவதற்காகக் கால்களைத் தரையில் நட்டு, அவற்றின் மேற் பகுதிகளைத் தென்னங்கீற்றுப் போன்றவற்றால் வேய்ந்து அமைக்கப்படும் அமைப்பினை இச்சொல் உணர்த்தும். பந்தல் தரும் நிழற் பயனின் தேவைக்கேற்பப் பந்தல்கள் திண்மையுடையனவாகவோ, எண்மையுடையனவாகவோ, வேய்பொருட்களும் பிறவும் மாறுபடும். இந்தச் சொல், சிறிதே வேறுபட்ட வடிவங்களில், பொருள் மாறுபாடின்றித் தெலுங்கு கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் வழங்கப்படுவதால், இது திராவிட மொழிக் குடும்பத்துச் சொல்லாகும் என்பது தேற்றம். இச்சொல்லின் சிறிது மாறுபட்ட வடிவம் பொருள் மாற்றமின்றிப் பிறிதொரு சொல்லாய்த் தமிழில் வழங்கி வருவதால், திராவிட மொழிகளுள் தொன்மை சான்றதாய தமிழ் மொழிக்கு உரியதென்று ஊகிக்கலாம். 'பந்தல்' என்பது நான்கு திராவிட மொழிகளில் உள்ளது என்றும், அதன் மாற்று வடிவம் கன்னடத்தில் மட்டும் உள்ளது என்றும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளது.

தேவைக்கேற்ப அமைக்கப்படும் பந்தல், கோடைப் பந்தல், (வேனிற் பந்தல்), திருவிழாப் பந்தல், திருமணப் பந்தல் என விதந்து கூறப்படும். ஏர் கொண்டு நடைபெறும் உழவுத் தொழிற் சிறப்பினால் அதனைச் செய்வோர், 'ஏருழவர்' என்று சிறப்பிக்கப் பெறுவர். அதனைப் போலவே, வீரரை 'வில்லேருழவர்' என்றும், சொற்பொழிஞரைச் 'சொல்லேருழவர்' என்றும் உயர்த்திக் கூறும் மரபுண்டு. பயனிலவாய சொற்களைப் பாரித்துரைப்போரை, "வாய்ப்பந்தல்" போடுபவர் என்று குறைத்துக் கூறப்படுவதும், 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தாற் போல' என்று உருவகப் பாங்கில் உவமை கூறப்படுவதும் வழக்கில் உள்ளன.

இவ்வாறு எல்லாராலும் பலவகையில் பயன்படுத்தப்படும் இந்தச் சொல்லின் இலக்கிய ஆட்சியைப் பின்னோக்கிப் பார்க்குங்கால் வியப்பு ஏற்படுகின்றது.

'பந்தல்' என்னும் இச்சொல் வடிவம், 'பாட்டும் தொகையும்' எனப்படும் சங்கத் தொகை நூல்களில், ஓரிடத்திலாவது காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இந்த வடிவம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் இடம் பெறவில்லை. ஒரு காலத்தனவெனக் கருதப்படும் இரட்டைக் காப்பியங்களுள் மணிமேகலையில் மட்டும் ஒரே ஒரு இடத்தில், 'தண்ணீர்ப் பந்தல்' என்னும் பொருளில் "நிறைந்த பந்தல் தசும்புவார் நீரும்" (மணி.28-14) என இடம் பெற்றுள்ளது. இதே பொருளை உணர்த்தும் 'பந்தர்' என்னும் சொல் பாட்டும் தொகையுமாகிய நூல்களில் 25 இடங்களிலும், சிலப்பதிகாரத்தில் 10 இடங்களிலும், ஆசாரக் கோவையில் ஓரிடத்திலும் வந்துள்ளது. பந்தல் எனும் வடிவத்தை ஓரிடத்தில் பயன்படுத்திய மணிமேகலை, 7 இடங்களில் 'பந்தர்' என்பதனைப் பயன்படுத்தி உள்ளது. இவ்வடிவத்தை நான்கு இடங்களிற் பயன்படுத்திய (பெரும்பாண். 124,187,267,297) கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஒரு முறைகூட இச்சொல்லைப் பயன்படுத்தவில்லையே! நூற்றுக்கணக்கான சங்கப் புலவர்களும் பயன்படுத்தவில்லையே! பந்தர் என்பதனை ஏழு இடங்களிற் பயன்படுத்திய சாத்தனார், பந்தல் என்பதனை ஒரு முறை பயன்படுத்தியுள்ளதனை, அவரது படைப்பாகவோ, தவறுபட எழுதப்பட்டதாகவோ கருத இயலாது. தங்காலத்து வழங்கிய 'பந்தல்' எனும் வழக்கு வடிவத்தையே பயன்படுத்தியராதல் வேண்டும். அந்த ஓரிடத்தையும் 'பந்தர்' என்றே எழுதியிருக்கலாமே; எழுதியிருந்தால் அதனைப் பிழை என்று கூற இயலாதே! சங்க இலக்கியங்களில் 'பந்தர்' என்னும் சொல் 'பந்தல்' என்னும் பொருளிலும், பண்டகசாலை என்னும் பொருளிலும் (பதிற்.51-16) ஆளப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் இவ்விரண்டு இடங்களையும் (பதிற். 51,55) பாடிய காக்கை பாடினியார் நச்செள்ளையார் பந்தர் என்ற சொல்லிற்கு அக்காலத்தில் இருந்த வேறு பொருளை நினைந்து தம் பாடல்களிற் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது. இந்நிலையில்

பந்தல், பந்தர் பற்றி அறிய இலக்கண ஆசிரியர்களின் துணையை நாடுவது நலம் பயக்கலாம்.

எழுத்திலக்கணம் கூறப் போந்த நன்னூலார் அது பன்னிரு பகுதிகள் கொண்டதென்றும், அவற்றுள் ஒன்று போலி என்பதாகுமென்றும் குறிப்பிடுகின்றார். அவர் கருத்துப்படி, மொழி முதலிடை கடையெனும் மூவகைப் போலிகளுள், பால்பகா அஃறிணைப் பெயர்களின் ஈற்றில் நின்ற மகரமெய், னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு. "மகரம் னகரத்தோடொத்தலாவது, பெயரினிறுதியிலே மகரம் நின்றவிடத்து னகரம் வந்து நிற்பினும், வேற்றுமையின்றி ஒத்தலாம்" என்று ஆறுமுக நாவலர் விளக்கம் தந்ததோடு, அகம், அகன், நிலம், நிலன் என்று எடுத்துக் காட்டும் கொடுத்துள்ளார். இதனால், அகம், நிலம் முதலியன சொல்லின் மூல வடிவமென்றும், அகன் நிலன் முதலியன அவற்றின் வழியே திரிபாய் வந்த போலி என்றும் உணர்த்தியுள்ளார். நன்னூலார் தம் நூற்பாவிற் கூறாவிட்டாலும், சிவஞான முனிவர் ஆறுமுக நாவலர் போன்ற உரையாசிரியர்கள் தங்கள் கால மொழி வழக்கில் கண்ட மொழி இறுதிப் போலி வடிவங்களை இலக்கண விதிக்குள் அகப்படுத்திக் காட்ட விழைந்தனர். அதனால் ஆறுமுக நாவலர் தம் நன்னூற் காண்டிகை உரையில், இலக்கணிகளுக்குரிய வகையில், "இவ்விறுதிப் போலியை முற்கூறியதனால், சுரும்பு-சுரும்பர், வண்டு-வண்டர் என மென்றொடர்க் குற்றியலுகரப் பெயரிறுதி யுகரம் அர் என்பதனோடு ஒத்து வருதலும், பந்தல்-பந்தர், சாம்பல். சாம்பர் எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரினிறுதி லகர மெய் ரகர மெய்யோடு ஒத்து வருதலுங் கொள்க" என்று குறிப்பிட்டுள்ளார். இதனை உடன்படும் உரையாசிரியர்கள் கருத்துப்படி, பந்தல், சாம்பல் என்பன சொல்லின் மூல வடிவங்கள் என்பதும், பந்தர், சாம்பர் என்பது போலியாய்த் திரிந்த வடிவங்கள் என்பதும் தெளிவாகின்றன. இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமாயின், பந்தர் சொல்லாட்சியினைச் சங்க நூல்களின்றி மிகுதியான அளவில் காணுங்கால், "மூல வடிவம் முடங்கிக் கிடக்கப் போலி வடிவம் வலம் வந்து கொண்டிருக்கிறது" என்று கூறத் தோன்றும்!

வழக்கில், 'போலி' என்னும் சொல் 'போன்றிருப்பது' எனும் பொருளில் வழங்கப்படுகின்றது. அதனால், உண்மையல்லாதது, மூலத்தின் வேறுபட்டது, தாழ்ந்தது என்னும் கருத்தினை உணர்த்துவதாகவே இச்சொல் வழக்கில் உள்ளது. போலிச் சாமியார், போலிக் கதர், போலிச் சரக்கு என்பன போன்ற தொடராட்சியில் இதனை உணரலாம். ஆனால், இலக்கணத்தாரால் குறிப்பிடப்படும் 'போலி' வகையில் அமையும் சொற்களுக்கும் அவற்றின் மூல வடிவங்களுக்கும் வரி வடிவில் வேறுபாடிருக்குமேயன்றிப் பொருளில் வேறுபாடு சிறிதும் இராது. அப்போலிச் சொல் வடிவம், இலக்கியத் தரம் மிக்கதாக ஆளப்பட்டிருப்பதனை இலக்கியங்களிற் காணமுடிகிறது. "அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்தோம்புவான் இல்" என்றும், "செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலம்" என்றும், "மண் ஞாத்த கோட்ட மழகளிறு" என்றும், "குப்பை வெண்மணல் ஏறி அரைசர்" என்றும், "மையல் கொண்ட ஏழமில் இருக்கையர்" என்றும், "விரித்த பந்தர்ப் பிரித்த தாமென மீன் ஒழித்தது வானமே" என்றும் அமையும் தொன்மை இலக்கியத் தொடர் ஆட்சிகளால் இதனை உணரக் கூடும். இவ்வகையில், "பந்தல்" என்னும் வழக்கு வடிவத்தை ஆளாமல், 'பந்தர்' என்னும் அதன் போலி வடிவத்தைச் சங்கப் புலவோர் ஆண்டிருப்பர் போலும் என எண்ணலாம். பந்தல் என்னும் சொல் வழக்கம் அக்காலத்தே மக்களிடம் இருந்துள்ளதனை, மணிமேகலை ஆசிரியர் தம் நூலகத்தே ஓரிடத்தில் ஆண்டிருப்பது கொண்டுணரலாம்.

பந்தல் (பந்தர்), திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின் போது அலங்காரம் மிக்கதாய்ச் சின்னாட்களுக்கு இருப்பதாய் அமைக்கப்பட்டதனையும், சிற்றில் முற்றத்தே பன்னாள் நிலைத்திருக்கும் பாங்கில் அமைக்கப்பட்டதனையும், பாடி வீடு போன்று சின்னாட் பயன்கருதி அமைக்கப்பட்டதனையும் சங்க நூல்கள் காட்டுகின்றன. "நிரைகால், தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி" - (அகம் 86-3) மணப்பந்தலையும், "கடுந்துடி தூங்கும் கணைக்காற் பந்தர்" (பெரும்.124) குடியிருப்புப் பந்தலையும், "ஆடணி அயர்ந்த அகன் பெரும்பந்தர்" (அகம்.

98-15), விழாக் காலத்தே களமிழைத் தமைத்த பந்தலையும், இவ்வாறு அமைக்கப்பட்ட பிறவகைப் பந்தல்களையும் சங்கப் பாடல்களிற் காணலாம். வீர வழிபாட்டின் வெளிப்பாடாக இலங்கும் நடுகல்லினை உள்ளடக்கிப் பந்தல் அமைக்கப்பட்டதையும், அது புடவையால் மூடி நிழற் செய்யுமாறு அமைக்கப்பட்டதையும், .

*"உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே*
*மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி*
*இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்*
*படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே" (புறம். 268-25-28)*

என்னும் புறப்பாடற் பகுதியால் அறியலாம். எளிய மக்களும் தாம் அமைத்த சிற்றிலுக்கு முன்னால், தூண்கள் நட்டுப் பந்தல் அமைத்துப் பல்லாற்றானும் அதன் பயனைத் துய்த்து வந்துள்ளனர்.

ஒரு வலைஞர் குடியிருப்பிலமைந்த சிற்றிலையும் அதன் முன்னர் அமைக்கப்பட்டிருந்த பந்தரையும் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

*"வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇ*
*தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த*
*குறியிறைக் குரம்பை பறியுடை முன்றில்*
*கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய*
*பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்" (பெரும்பாண், 263-67)*

என்று காட்டியுள்ளார். இவற்றை நோக்குங்கால் பந்தல் தூண்கள் நட்டுத் தனியாகவோ, வீட்டை ஒட்டிய முற்றத்திலோ அமைக்கப்பட்டதனை அறியலாம். பந்தலின் பயன் பாட்டிற்கேற்ப அது, கீற்று அல்லது புடவை போன்றவற்றால் மூடப்பெற்று உள்ளும் புறமும் அலங்காரம் செய்யப்பட்டது. அதன் தரைப் பகுதி, புது மணலால் நிரப்பப்படுவதுண்டு.

இல்லமும் பந்தலும் தனித் தனியாகவோ இணைத்த நிலையிலோ அமைக்கப்பட்ட வீட்டமைப்பு, பண்டு, தமிழ் மக்களின் கோயிலாகவும் முன் மண்டபமாகவும்

அமையலாயிற்று. மரத்தடிகளிலும் மன்றங்களிலும் சந்தி போன்ற இடங்களிலும், தெய்வப் படிவங்களை அல்லது அவற்றின் குறியீடுகளை அமைத்து வழிபட்டதன் வளர்ச்சி நிலையாகக் கோயில்களும் அம்பலங்களும் உருவாயின. அவை பெரும்பாலும் மண், கல், மரம், உலோகம் ஆகியன கொண்டு அமைக்கப்பட்டன. தெய்வ உருவம் அல்லது குறியீடு அமைந்த அறை (கருவறை-கருவில்) காலப் போக்கில் 'கர்ப்பக்கிரகம்' என்றும், அதன் முன்னர் அமைந்த பந்தல் முன் மண்டபம் (அந்தராளம்) என்றும் வழங்கப்படலாயின. மண்ணாலும் மரத்தாலும் ஆகிய கோயில்களும் மண்டபங்களும் காலப்போக்கில் அழியவும் அழிக்கப்படவுமான சூழ்நிலையில், அழிந்துபட்டன. மக்கள் கைவிட்டுச் சென்றமையால், சுவர்கள் இடிய விட்டம் வீழ்ந்துபட, யானை முதலியன உட்சென்று உராய, ஆண்டுறைந்த தெய்வம் அகல, மணிப்புறாக்கள் வேற்றிடம் செல்ல, மெழுகுதல் பலியிடுதல் முதலியன நீங்கிய பொதியிலொன்றினைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் தம் அகப்பாடலில் (அகம்-167) காட்டுவதன் மூலம் இதனை அறியலாம். இந்த இலக்கியக் குறிப்பின் வேறாகச் சங்ககாலக் கோயில் பற்றிய எந்தச் சுவட்டினையும் யாண்டும் காண்டற்கில்லை. தமிழகக் கோயிற்கலை வளர்ச்சி வரலாற்றில், கற்றளிகள் கற்கோயில்கள் உருவாகும் நிலை தோன்றிய போது, மரத்தச்சர்களும் மண்ணீட்டாளர்களும் செய்து காட்டிய கட்டடக் கலை நுட்பங்களைக் கற்றச்சர்களும் தம் தொழிலில் நயம்படப் புலப்படுத்துவாராயினர். மர வேலையில் அமைந்த தொழில் நுட்பத்தினைக் கல்லில் மேற்கொண்டு, தமிழகச் சிற்பியர் வெற்றி கொண்டதனை, ஆவுடையார் கோயில் மண்டபக் கற்கொடுங்கையும், திருவலஞ்சுழிக் கோயிலிலுள்ள கற்காலதரும் (கற்சாளரம்) இன்றும் எடுத்துக் காட்டி இலங்குகின்றன.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தஞ்சாவூர், தாராசுரம் போன்ற ஊர்களில் கட்டப்பெற்ற திருக்கோயில்களின் சுவர்கள் கோபுர வாயிற் பகுதிகள் போன்ற இடங்களில் திருத்தொண்டர் புராணத்துள் இடம் பெறும் நாயன்மார்களின் வரலாற்றுக் காட்சிகள் புடைச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளவற்றைக் காணலாம். அக்காட்சிகள் சிலவற்றில்

செதுக்கப்பட்டுள்ள கோயிற் காட்சிகள், மிகப் பழைய காலத்தில் அமைந்திருக்கக் கூடிய கோயிலமைப்பினைச் சிற்பிகள் மரபு வழியாகத் தம் அகக் கண்ணால் கண்டு காட்டப்பட்டனவாகும். எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெருங்கோயில், இராசராசன் திருவாயிலின் வடக்குப் பகுதியில் வடிக்கப்பட்டுள்ள கண்ணப்பர் வரலாற்றுக் காட்சிகளில் இடம் பெறும் கோயில் அமைப்பையும், தாராசுரம் திருக்கோயிலின் விமானப் புறச்சுவரில் இடம் பெற்றுள்ள சிற்பத் தொகுதியில் தில்லைவாழ் அந்தணர், திருநீலகண்டக் குயவனார், முருக நாயனார், திருநாவுக்கரசர், திருநீல நக்கர், புகழ்த்துணையார் போன்றவர் பற்றிய சிற்பக் காட்சியில் இடம் பெறும் கோயில் அமைப்பையும் குறிப்பிடலாம். இந்த நாயன்மார்களின் காலத்தை மனத்திற் கொண்டு, அக்காலக் கோயிற் கட்டட அமைப்பினை ஊகித்து அமைக்கப்பட்டனவாக இவற்றைக் கொள்ள வேண்டும்.

தமிழகக் கோயில்கள் 'மண்டளி' நிலையிலிருந்து 'கற்றளி' நிலைக்கு மாறியமைக்குப் பொதுவாகப் பல்லவ மன்னர்களும் சிறப்பாக மகேந்திரவர்மனும் பெருங் காரணர்களாவர். கல், மரம், உலோகம், சுண்ணாம்பு ஆகியன இல்லாமல் கோயிலமைத்த பெருமை 'விசித்திரசித்தன்' எனப்பெறும் மகேந்திரவர்மனுக்கு உண்டென்பதனை மண்டகப் பட்டு எனுமிடத்திலுள்ள கற்பொறிப்பு கூறுகின்றது. அவன், சமண சமயத்திலிருந்து மாறிச் சைவ சமயம் சார்ந்த நிலையில் திருச்சிராப்பள்ளி மலையின் மேல் ஒரு குடைவரைக் கோயிலை அமைத்தான். இன்று அம்மலையின் படிகள் மீதேறிச் சென்று, தாயுமானவர் கோயிலுக்குச் செல்லாமல், அதன் எதிரே மணிமண்டபம் நோக்கி ஏறிச் சென்றால் இடப்பக்கப் பாறையில் இக்குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. தெற்குத் திசை நோக்கிய அக்குடைவரையில் முன்னர் இரு தூண்கள் விளங்கக் காணலாம். குடவரையின் கிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கிய கருவறை அமைக்கப்பட்டுள்ளது. குடைவரைக் கோயில் தோன்றிய காலத்தில் வழிபாட்டில் இருந்திருக்கக் கூடிய இலிங்கத் திருமேனி இன்று அங்கில்லை. அகற்றப்பட்டிருப்பது காலத்தின் கோலமாகும்! கருவறைக்கு எதிரே, குடைவரையின் மேற்புறச் சுவரில், கங்காதர மூர்த்தியின் பெரிய அளவிலான

திருவுருவம் படைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. குடைவரையின் உள்ளே வடபுறத்தே அமைந்த நெடும் பாறைச் சுவர், அரிய தமிழ் நூலாக - தமிழ்ப் பூங்கோயிலாக மாறியுள்ளது ஓர் அற்புதமாகும்! 'கல்லுஞ் சொல்லாதோகவி' என்பது ஒரு கவிஞன் வாக்கு. இங்கே, கற்பாறை ஒரு கவிப்பாறையாகத் திகழ்கின்றது. நாட்டிலே ஏட்டிலே எங்கும் காண முடியாத ஒரு தமிழ் நூலினை - கங்கை சேகரனின் புகழ்பாடும் ஒரு பக்திப் பனுவலை - கடந்த ஆயிரம் ஆண்டுகளாக மௌனமாகக் காத்து வந்துள்ளது இச்சுவர்.

பாறை நூலின் மோன நிலையை மாற்றி, இக்காலத் தமிழ் எழுத்தமைதியில் உருக்கொடுத்த நிலையில், 'சிராமலை அந்தாதி' எனப் பெயர் பெற்றது. மணியன் மகன் நாராயணன் என்பவனால் இயற்றப்பட்டுச் சிராமலைக் குடைவரைச் சுவரில் பொறிக்கப்பட்டது. நூறு பாடல்கள் கொண்டது எனப்பட்ட போதிலும் 102 பாடல்களும் 2 பாயிரப் பாடல்களும் கொண்டுள்ளது. இந்த நூலின் பாயிரப் பாடலில்தான் 'கற்பந்தல்' என்னும் தொடராட்சி இடம் பெறுகிறது.

கல்லறை, கல்முழை, கல்லளை, கல்லகம், கற்சிறை, கற்கனை சொல்லாட்சிகள் சங்கப்பனுவல்களிலும், தொல்காப்பியத்தும் இடம் பெற்றுள்ளன. ஆனால், அங்குக் கற்பந்தர், கற்பந்தல் என்னும் சொல்லாட்சி இடம் பெறவில்லை. சிராமலை அந்தாதிப் பாயிரத்தில் இடம்பெறும் இந்தத் தொடராட்சி சிந்தனைக்குரியது. மரத்தூண்கள், தென்னங்கீற்று போன்றன கொண்டு அமைக்கப்பட்ட பந்தல் (பந்தர்) கற்றூண்கள் நிறுவிக் கற்பலகைகளால் மூடப்பெற்ற அமைப்பான நிலையிலும் பந்தல் என்ற சொல்லால் கற்பந்தல் என்ற சொல்லால், குறிப்பிடப் பட்டுள்ளது. பிற்காலத்தில் இந்த அமைப்பு 'மண்டபம்' என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது. அமைக்கப்படும் பொருட்கள் மாற்றமெய்தினாலும், பெயர் மாற்றமில்லாமல் வழங்கப்படும் என்பதனை உணர்த்தி நிற்பது 'கற்பந்தல்' என்னும் அரிய சொல்லாட்சியாகும். அந்தப் பாடற் பகுதி,

**"கற்பந்தல் நிழலில் வைத்த கலித்துறை நூறு;சகற்பார்**
**பொற்பந்த நீழல் அரன் திருப் பாதம் பொருந்துவரே"**

என்பதாகும். மரத்தால் செய்யப்பட்டமையால் 'மரக்கால்' என்று கூறப்பட்ட அளவைப் பெயர், அக்கருவி உலோகத்தால் செய்யப்பட்ட நிலையிலும் மரக்கால் எனும் பெயரால் வழங்கப்படுவது போல, மரத்தாலாகிய பந்தல், கல்லால் ஆகிய நிலையிலும் 'பந்தல்' எனும் பெயரில் (கற்பந்தல்) என்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

'கற்பந்தலில் வைத்த' என்பதால் இந்த அந்தாதிச் செய்யுட்கள் கற்பந்தலின் உட்புறத்தே சுவரில் பொறிக்கப் பட்டமை புலனாகின்றது.

'நாராயணன் நம் சிராமலை மேல் கற்பதித்தான் சொன்ன கவி' எனும் பாயிர வெண்பாவும் சிந்தனைக்குரியது. "சொன்ன கவி" என்பது, அக்கருவறையிலுறையும் இறைவன் முன்னர்ச் சொல்லப்பட்ட கவி என்னும் பொருள் தந்து நிற்கின்றது. சொன்ன என்பதனை மேலும் சிந்தித்தால், இந்த அந்தாதி, அந்த இறைவன் திருமுன்பு அரங்கேற்றப்பட்டது என்னும் கருத்தும் புலனாகும். அதனால், மணியன் மகனும், கவிஞனும், சிவபக்தனுமாகிய நாராயணன் அந்தாதி நூலினை இயற்றி, அன்று அக்குடவரைக் கோயிலில் வடப்புறச் சுவரில் பொறிக்கச் செய்தான் என்பதனை உய்த்துணர முடிகின்றது.

'நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்' என்று இளங்கோவடிகளும், முத்துடைத் தாம நிரை தாழ்ந்த பந்தற்கீழ்' என்று ஆண்டாளும் மங்கல மணப்பந்தல்களைக் குறிப்பிட்டிருந்தும், எவ்வாறோ பந்தல் என்னும் சொல், அமங்கலச் சார்புடையதாய்க் கருதப்பட்டுத் தமிழகத்தின் ஒருசார் மக்களால், மணப்பந்தலை அச்சொல்லால் குறிப்பிடலாகாது என்னும் கருத்து ஏற்பட்டுள்ளது. அவர்கள் அதனைக் காவணம், கொட்டகை எனும் பெயர்களால் குறிப்பிடுவர். அமங்கலம் உணர்த்தும் அடைச்சொற் சேர்க்கையாலன்றி இயல்பான நிலையில் பந்தல் என்பதற்கு அத்தகு பொருள் அமையாது என்பதனைச் சான்றோர்தம் இலக்கிய, கல்வெட்டு ஆட்சிகள் உணர்த்துகின்றன.

# 3. கம்பரில் உவமை வளம்

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி

இராம, இலக்குவர்கள் சீதா பிராட்டியாரோடு கோதாவரிக் கரையை அடைந்தபோது, அவர்கள் அந்தப் பேராற்றைக் கண்டதைச் சூர்ப்பணகைப் படலத்தின் முதற்பாடலில் கம்பர் சொல்லுகிறார்.

*புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து*
*புலத்திற் றாகி*
*அவிஅகத் துறைகள் தாங்கி*
*ஐந்திணை நெறி அளாவிச்*
*சவியுறத் தெளிந்து தண்ணென்று*
*ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்*
*கவியெனக் கிடந்த கோதா*
*வரியினை வீரர் கண்டார்* - **கம்ப. 2732**

இந்தப் பாடலிலே சான்றோர் கவிபோலக் கோதாவரிப் பேராறு கிடந்ததாகப் பாடுகிறார். கவிதை, ஆற்றுக்கு உவமையாகிறது.

உவமையணியிலே முதன்மையான கூறு, பொதுத் தன்மையாகும். அதாவது, உவமைக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் பொதுவான கூறு இருக்க வேண்டும். நாம் மேலே பார்த்த பாடலில் சான்றோர் கவிக்கும் கோதாவரிக்கும் பல பொதுத்தன்மைகள் இருப்பதைக் கம்பர் எடுத்துரைக்கிறார். அப்படி எடுத்துக்காட்டுகின்ற பொதுத் தன்மைகளில் முதலிடம் பெறுவது அணி - அதாவது அழகு ஆகும். கவிதை (இலக்கிய உலகுக்கு) அழகு; அதுபோலப் புவிக்கு (உலகத்துக்கு) அழகு கோதாவரி.

ஆக, கம்பரின் கருத்துப்படி - அவர் சொன்ன உவமையின்படி - கவிதைக்கு அணி இன்றியமையாதது. 'சான்றோர் அணி பெறச் செய்வன செய்யுள்' என்று மற்றப் பெரியோர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

அணிகளுக்கெல்லாம் முதன்மையானது - ஆதிமுதலானது உவமைதான். உவமை என்னும் நடிகையே பற்பல வேடங்கள் புனைந்து நடிக்கிறாள் என்று அப்பைய தீட்சிதர் என்ற வடமொழிப் புலவர் சித்திர மீமாம்சை என்னும் நூலிலே தெளிவுற விளக்கியுள்ளார். உவமையின் பல்வேறு கோலங்களே எல்லா அணிகளும் என்பது கவிதையியலார் ஏற்றுக் கொண்டுள்ள கருத்தாகும். நம் காலத்து மாபெரும் கவிஞராகிய சுப்பிரமணிய பாரதியாரும் இக் கருத்துடையவர்.

"எல்லாவித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தாரங்களைத் தவிர வேறொன்றுமில்லை; 'உபமாலங்காரமே அலங்கார சாஸ்திரத்தில் பிராணன்' என்று பழைய இலக்கணக்காரர் சொல்கிறார்கள்" என்பது பாரதியார் வாக்கு. எனவே, கவிச்சக்கரவர்த்தி கம்பரின் காவியத்தில் அணிகளின் பேரரசியாகிய உவமை, கட்டாயமாக வளமான இடம் பெறுவதில் வியப்பில்லை, இயல்பே.

வளம் என்பது இரண்டு வகைப்படும். எண்ணிக்கையின் பெருக்கத்தை வளம் என்கிறோம். தகுதி, தன்மை, புகழ் போன்றவற்றின் பெருக்கத்தையும் வளம் என்றுதான் சொல்கிறோம். ஆக, எண்ணிக்கைப் பெருக்கத்தாலும் ஏற்றத்தின் பெருக்கத்தாலும் வளம் அடையாளம் காணப்படும்.

காண்டந்தோறும் நூற்றுக்கணக்கான உவமைகள் இடம் பெற்றுக் கம்பரின் காவியத்திற்கு அழகு ஊட்டுகின்றன.. உவமையின் எண்ணிக்கையை நிரல்படுத்தி எடுத்துக்காட்டுவது கால எல்லையில் அடக்கிவிட முடியாது. பொருள் வள ஏற்றத்தால் கம்ப ராமாயணத்துக்கு உவமைகள் வளம் ஊட்டுவதை எடுத்து விளக்குவதும் கால எல்லையில் அடங்காது.

ஆங்காங்கே சில உவமைகளை எடுத்துக்காட்டி, அவற்றால் காப்பியம் கவிதை வளம் பெறுவதை எடுத்துக் காட்டும் சிறு முயற்சியே இப்போது மேற்கொள்ளப்படுகிறது.

'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற புகழ் பெற்ற பாடலில், 'கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்' என்ற செய்தி வருகிறது. இதில் 'தாமரை போன்ற கால்கள்'

என்ற கருத்தில் 'கமலம் அன்ன தாள்' என ஓர் உவமை அமைகின்றது. இது மிகவும் சாதாரணமான, எளிய உவமை. இதுபோலவே கைகளுக்கு, கண்களுக்கு, முகங்களுக்குத் தாமரையை உவமை சொல்லும் இடங்கள் மிகப் பலவாகும். ஆனால், தாமரை போன்ற கைகள், தாமரை போன்ற கண்கள், தாமரை போன்ற முகம் என வரும் உவமைகளை எடுத்தாளுவதற்குப் பெருந்திறமை வேண்டியதில்லை. தாமரை போன்ற முகம் என்பதைச் சற்று மாற்றி முகத் தாமரை என்று உருவகமாக்கும்போது எளிய உவமை சற்றே மிகுந்த வளம் பெறுகிறது. 'சாளரம் பூத்தன தாமரை மலர்கள்' என ஒரு கவித் தொடர் உண்டு. சாளரங்கள் வழியாகப் பெண்கள் பார்த்தார்கள். இந்தச் செய்தியை - தாமரை போன்ற முகம் கொண்ட பெண்கள் சாளரத்தில் முகம் பதித்துப் பார்த்ததைச் 'சாளரம் பூத்தன தாமரை மலர்கள்' என்று கவிஞர் பாடுகிறார். வழக்கமான உவமைதான்; ஆனால், அதே உவமையைக் கையாளும் முறையில், எளிதான ஓர் உவமை அற்புதமான வளம் பெற்று விடுகிறது.

இன்னொரு காட்சி பார்க்கலாம். மகளிர் முகத்துக்குப் பூரண சந்திரனை உவமையாகப் புலவர்கள் பாடுவது மரபு. சந்திரன் போன்ற முகம், சந்திர வதனம் என்று சொல்லும்போது எளிய உவமையாகின்றது. முழுமதிக்குக் களங்கம் உண்டு. களங்கம் இல்லாமல், முழுப் பரப்பும் ஒளி மயமாகவுள்ள சந்திரன் ஒன்று இருந்தால், அந்த 'மறு இல் மதிபோன்றது பெண்ணின் முகம்' என்றும் புலவர்கள் உவமை சொல்வார்கள். அப்படி ஒரு சந்திரன் இல்லையாகையால், இவ்வாறு வருவதை இல்பொருள் உவமையணி என்பார்கள். உவமையணியின் வளமான ஒரு வடிவம்தான் இல்பொருளுவமை. இதே இல்பொருளுவமையைக் கம்பர் எப்படி எடுத்துரைக்கிறார் என்று பார்க்கலாம்:

***வாளரம் பொருத வேலும்,***
***மன்மதன் சிலையும், வண்டின்***
***கோளொடு கிடந்த நீலச்***
***சுருளும், செங்கிடையும் கொண்டு***

*நீளிரும் களங்கம் நீக்கி*
*நிரைமணி மாட நெற்றிச்*
*சாளரம் தோறும் தோன்றும்*
*சந்திர உதயம் கண்டார்* - **கம்ப. 493**

விசுவாமித்திர முனிவரோடு மிதிலை நகர வீதிகளிலே இராமனும் இலக்குவனும் நடந்து போகும்போது அவர்கள் கண்ட காட்சி இது. நகர வீதியிலே நடந்து போகிறவர்கள் சந்திரோதயத்தைக் கண்டார்களாம்! அதுவும் களங்கத்தை முழுமையாகத் துடைத்துவிட்டு மிதிலை நகரத்துச் சன்னல்களிலெல்லாம் சந்திரோதயம் ஆகியிருப்பதைக் கண்டார்களாம்! அவர்கள் கண்ட சந்திரன் அழுக்கு நீங்கியதோடு மட்டுமில்லை அந்தச் சந்திரனிலே வேல் இருக்கிறது; வண்டுகள் உள்ள நீலச் சுருள் இருக்கிறது; சிவந்த நெட்டி இருக்கிறது! இப்படிப்பட்ட சந்திரன் ஒன்றல்ல, சாளரம் தோறும் பல சந்திரன்கள்..... வேல் போன்ற கண், வில் போன்ற புருவம், நீலச் சுருள் போன்ற கூந்தல், சிவந்த நெட்டி போன்ற உதடுகள் - இவ்வளவும் கொண்டதோடு மறுவும் நீங்கிய சந்திரன் போன்ற முகங்கள் சாளரங்களில் தெரிகின்றனவாம். அதாவது, மிதிலை மகளிர் சாளரங்கள் வழியாக இராம, இலக்குவர்களைப் பார்க்கிறார்கள் என்பதைக் கம்பர் இப்படிப் பாடுகிறார். சந்திரன் போன்ற முகம் என்ற ஓர் எளிய உவமை கம்பர் கவி வண்ணத்தால் கற்பனை வ்ளம் கொழிக்கின்ற செவி நுகர் கனியாக வளம் பெருகிப் பொலிகிறது.

ஒரே கருத்துக்கு இரண்டு உவமை கூறும் ஓர் இடத்தைக் காண்போம்.

விசுவாமித்திரரின் வேள்வி காப்பதற்காக அவருடன் இராமனும் இலக்குவனும் போகிறார்கள். இடைவழியில் ஒரு பாலைவனம்; ஈரப் பசை என்பதே சற்றும் இல்லாமல் வறண்டு போய் வெப்பமே ஆதிக்கம் செலுத்துகின்ற கொடிய பாலைவனம். . . . . . நீர் வளம் பொருந்தியதே நிலம்; வற்றா நீர்வளம் இல்லாவிட்டாலும் ஈரமாவது இருக்கிறதா? இல்லை. ஈரம்தான் இல்லை; ஈரப் பசையாவது இருக்கிறதா? இல்லை,

நீர் இல்லை, ஈரம் இல்லை, பசையும் இல்லை. இப்படிப் பசையற்றுப் போன பாலை நிலத்துக்கு என்ன உவமை பாலை சொல்லலாம் என்று நீங்கள் தனியாக இருந்து கற்பனை செய்து பாருங்கள்; அப்படி முயன்று நீங்கள் வெற்றி பெறலாம், பெறாமலும் போகலாம். முயன்று பார்த்து முடித்தபின் கம்பர் தரும் உவமையைப் படித்துப் பாருங்கள்.முத்தியை நாடுகின்ற முனிவர் மனம்போலப் பாலைநிலம் பசையற்றுக் கிடக்கிறது என்கிறார். ஆனால், முத்தியையே நாடுகின்ற மனத்தை அவ்வளவு எளிதிலே பெற்று விட முடியுமா, என்ன! நல்வினை, தீவினை இரண்டிலுமிருந்து விடுதலை பெறவேண்டும்; காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று மதில்களைக் கடப்பதில் வெற்றி பெற வேண்டும்; இந்த இரண்டு வெற்றிகளையும் பெற்றபின் தான் முத்திப்பேறு ஒன்றையே நாடும் பக்குவம் மனத்துக்கு வரும். அந்த மனத்துக்கு விருப்பு வெறுப்பு இரா, . . . . . . . . . பசையற்றுப்போகும். இப்படி விரிந்த தத்துவ வளம் செறிந்த உவமை ஒன்று சொன்னாலே போதும்.

ஆனால், இராம இலக்குவர் கடந்து சென்ற பாலையின் கொடுமைக்கு இந்தத் தத்துவ உவமை மட்டும் சொன்னால் போதாது என்று கம்பர் கருதியிருக்கிறார்.

'இவனுக்கு இடம் கொடுத்தால் எவ்வளவு பொன் கிடைக்கும்' என்பதை மட்டும் கணிக்கின்ற கணிகையின் மனம் போலப் பாலைவனம் பசையற்றுக் கிடக்கிறது என்று இரண்டாவதாக இன்னும் ஓர் உவமை கூறுகிறார். 'ஏதோ இன்பம் கிடைக்கும்' என்று எதிர்பார்த்துப் போகிறவனிடம் இருக்கும் பொன்னை மட்டுமே பார்க்கிற பெண்ணுக்கு அன்பு, காதல் என்றெல்லாம் ஒன்றும் இருக்க முடியாது. பொருட் பெண்டிர் தரும் முயக்கத்தைப் பொய்ம்மை முயக்கம் என்பார் வள்ளுவர். அப்பெண்டிர்பால் பெறும் முயக்கம் உணர்ச்சி ஏதும் இல்லாத பிணத்தைத் தழுவியதுபோலத்தான் என்று மேலும் அவர் விளக்கிறார். அத்தகைய பெண்களின் மனத்திலே பசை எப்படி இருக்க முடியும்? விலை மகளிர் மனம்போலப் பசையற்றிருந்தது பாலை. இது இரண்டாவது உவமை.

ஒரு பொருளுக்கு இரண்டு உவமைகள் சொல்லிக் கம்பர் உவமையணிக்கு ஒரு புதிய பரிணாமத்தைக் கொடுத்து வளம் ஊட்டுகிறார்.

இந்தப் பாடலின் உவமை வளம் இந்த அளவோடு நின்று விடவில்லை. முத்தி நாட்டம் ஒன்றையே கொண்ட தகுதிமிக்க முனிவர்கள் மனம் ஓர் உவமை; பொருள் நாட்டம் ஒன்றை மட்டுமே கொண்ட - தகுதியால் கீழ்ப்பட்ட விலைமகளிரின் மனம் இரண்டாவது உவமை. இரண்டு மனங்களும் வடதுருவம் தென்துருவம் போல இலக்கால் முற்றிலும் முரண்பட்ட மனங்கள். ஒன்று, ஆன்ம லாபம் நாடுவது; இன்னொன்று ஆன்ம லாபம் பற்றிக் கனவிலும் கருதாத - லௌகிக லாபம், அதுவும் மகா மட்டமான முறையில் தேடுகின்ற லாபம் நாடுகின்ற பாதக மனம் - இப்படி இணைத்துக் காணமுடியாத இரு துருவ மனங்களிடையேயுள்ள ஒற்றுமையைக் கண்டு புரட்சிகரமான முறையில் உவமைக்கு வளம் ஊட்டியிருக்கிறார், கம்பர்.

கவிச்சக்கரவர்த்தியின் பாடல் வருமாறு:

**தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்**
**மூவகைப் பகை அரண்கடந்து, முத்தியில்**
**போவது புரிபவர் மனமும், பொன்விலைப்**
**பாவையர் மனமும்போல் பசையும் அற்றதே**

- கம்ப. 353

ஒரே பொருளுக்கு இரண்டு உவமைகள் கூறி உவமைக்கு வளம் சேர்த்தது போலவே ஒரே சூழ்நிலைக்குப் பல உவமைகளைப் பல பாடல்களில் கூறி வளம் சேர்ப்பதை இனிக் காண்போம்.

இராவண வதை முடிந்தது. இராம, இலக்குவர்கள் பிராட்டியோடு அயோத்திக்குத் திரும்பிவிட்டார்கள். இராமன், வெற்றி இராமனாய்த் திரும்பிவிட்டான். அன்னையர்க்குப் பிள்ளை, அயோத்தியர்க்குச் சக்கரவத்தி, அனைவர்க்கும் கண்ணின் பாவை. . . . . . . . . . . . . இவ்வளவுதானா? உலகியல் மாயையைக் கடந்து விட்டவர்களுக்கும் உயிரமுதம்.

இப்படியாகச் சூழ்நிலை ஒன்று; ஆனால், இராமன் பற்பலர்க்குப் பற்பல வகையில் நிறைவு தருகிறவனாக இருக்கிறான். ஒற்றை நிகழ்ச்சியின் ஒரே சூழல், பல்வேறுபட்டவர்களின் பல்வேறு அனுபவங்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த நிலையைச் சமாளிப்பதற்குக் கவிச்சக்கரவர்த்தியின் கவிதைத் திறன் கைகொடுத்துச் சாதனை படைக்கிறது.

தாய்மார்களுக்குத் தாய்ப்பசுவைச் சென்றடைந்த கன்றுபோன்றவன் ஆயினான், இராமன். உலகியல் மாயையிலிருந்து விடுபட்ட ஞானியர்க்கு மனம் ஒன்றிப் போகின்ற மனோலயம் போன்றவனானான். ஒளியற்ற கண்ணராயிருந்த பரத, சத்துருக்கனனாகிய இளையோர்க்குக் கண்பார்வையானான். உயிரற்றுக் கிடந்த உடலுக்குள் உயிர் புகுந்தது போன்ற அனுபவத்தை விளைத்தவன் ஆனான்.

கோசலை முதலியோர்க்குத் தாயை அடைந்த கன்று போன்றவனானான் என்று முதலில் சொல்லிய கம்பர், அவனுடைய வனவாசத்தால் மெலிவுற்ற பிற உயிர்களுக்கு உயிர்க் கன்றுகளுக்குத் தாய் வந்துவிட்டது போன்றவன் ஆனான், இராமன் என்று அவனைத் தாய்ப்பசு ஆக்குகிறார். கன்றும் அவனே; தாயும் அவனே! அன்பு கொண்டவர்க்கு எல்லாம் கிடைத்தற்கு அரிய அமுதம் போன்றவன் ஆனான். அவன் இன்மையால் இருண்டு போயிருந்தது உலகம்; இப்போது இருளுலகத்துக்கு ஒளி வந்தது போன்றவன் ஆனான். வாழ்வைச் சாவாக்கிக் கொண்டிருந்த பெண்களுக்குக் களிப்பேற்றும் அமுதபானம் போன்றவன் ஆனான்.

சுருங்கச் சொன்னால், அவனைத் தவிர எவர்க்கும், எதற்கும் உயிர் என வேறு இல்லை; உயிர்திணை, அஃறிணை எல்லாருக்கும் எல்லாவற்றுக்கும் அவனே உயிர். உயிர் திரும்ப வந்தது போல் இராமன் வந்துவிட்டான். இதுவரை உயிரில்லா ஓவியம் போல் இருந்த காடு, வயல், நகரம், நாடு, மகளிர், ஆடவர் எல்லாமும் எல்லாரும் ஓவியங்களாக இருந்தன, இருந்தனர். இப்போது அந்த ஓவியங்களுக்கு உயிர் வந்து விட்டது போல இராமன் வந்துவிட்டான். உயிர் தழைத்தது. உணர்வு பொங்கியது.

இராமன் வருகை ஒரே நிகழ்ச்சி. இந்த ஒரு நிகழ்ச்சியின் விளைவுகளைப் பல உவமைகளை உவமைக்கொத்தாகக் கொடுத்து உவமை வளம் காட்டுகிறார், கம்பர். பாடலும் ஒன்று அன்று, மூன்று:

*தாயருக்கு அன்று சார்ந்த கன்றெனும் தன்கயன் ஆனான்*
*மாயையில் பிரிந்தோர்க் கெல்லாம் மனோலயம் வந்தது ஒத்தான்*
*ஆய் இளையார்க்குக் கண்ணுள் ஆடு இரும்பாவை ஆனான்*
*நோய்உறு உலர்ந்த யாக்கை உயிர்புகுந்தானும் ஆனான்*

*எளிவரும் உயிர்கட் கெல்லாம் ஈன்றதாய் எதிர்ந்த தொத்தான்*
*அளிவரும் மனத்தோர்க் கெல்லாம் அரும்பத அமுதம் ஆனான்*
*ஒளிவரப் பிறந்தது ஒத்தான் உலகினுக்கு; ஒண்கணார்க்குத்*
*தெளிவரும் களிப்பு நல்கும் தேம்பிழி தேறல் ஒத்தான்*

*ஆவி அங்கு அவனலால் மற்று இன்மையால் அனையன் நீங்கக்*
*காவிஅம் கழனி நாடும் நகரமும் கலந்து வாழும்*
*மாஇயல் ஒண்கணாரும் மைந்தரும் வள்ளல் எய்த*
*ஓவியம் உயிர் பெற்றென்ன ஓங்கினார் உணர்வு பெற்றார்*

- கம்ப. 10270 - 72

எளிய உவமையை எளிமையாக அமைத்து நிறைவு அடைபவர் அல்லர் கம்பர். எளிய உவமையைச் சதுரப்பாட்டுடன் வளம் ஊட்டிச் சிறப்பிப்பதில் வல்லவர், கவிச் சக்கரவர்த்தி கம்பர். ஒற்றைத் தனி உவமைக்குப் புதுமையால் வளம் ஊட்டுவதோடு, ஒன்றுக்கே இரண்டு உவமை புனைந்து வளமூட்டுவார், அவர். அவ்வாறு இரண்டு உவமைகள் கொடுக்கும் போது முரண்பட்ட இரண்டு பொருள்களை ஒன்றுக்கே உவமைகளாக்கி வளமூட்டியவர், கம்பர். பல உவமைகளை உவமைக் கொத்தாக்கிக் கவிதையரங்கில் புதுமையும் புரட்சியும் செய்து உவமைக்குப் பெருவளம் சேர்த்தவர், கம்பர். ஆகவேதான்,

'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே' என்று அறிஞர்கள் அவரைச் சிறப்பித்தனர்.

(நன்றி: கோவை வானொலி 2.1.97)

# இலக்கியத்தில் திருச்செந்தூர்

## பேரறிஞர் வீ. உண்ணாமலை

திருச்செந்தூர் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்று. இதனைத் திருச்செந்தில், சீரலைவாய், செயந்திபுரம் என்னும் பெயர்களில் வழங்குவர். சைவர்களின் புனித இடமான இவ்வூர் நெல்லை மாவட்டத்தில் மன்னார் வளைகுடாவில் கீழ்க்கடல் ஓரத்தில் உள்ளது. கடற்கரை அடங்கிய மணல் மேட்டில் உள்ள கோயில் பல்லவ சிற்ப முறையில் அமைக்கப் பட்டுள்ளது. பண்டைய துறைமுகங்களான கொற்கை, காயல்பட்டினம் ஆகியவை இதன் அருகில் உள்ளன. சங்க இலக்கியம், காப்பியம், புராணங்கள், பக்தி இலக்கியம், தல புராணங்கள், பிற இலக்கியங்கள் இவற்றில் திருச்செந்தூர் பெற்றுள்ள இடத்தை இக்ககட்டுரை ஆய்கிறது.

'மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களே ஆறுபடை வீடுகளாகும். திருபரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற தலங்கள் என்கிறார் வாரியார் சுவாமிகள். இலக்கியங்கள் இத்தலம் இரண்டாவது இடம் பெறுவதை எடுத்துரைக்கின்றன. இத்தலத்திற்கு இன்னும் இரு பெயர்கள் உள்ளதை 'இதனை வீரவாகுத்தலம் எனக் குறிப்பிடும் வழக்கும் ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கது. கோள்களில் ஒன்றான கோள் இத்தலத்தில் வழிபட்டமையால் இதனை வியாழத்தலம் எனக் குறிப்பிடுகின்றதோர் வழக்கும் உள்ளது'. திருச்செந்தில், செயந்திபுரம் என்ற பெயர்களைவிட சீரலைவாய் என்ற பெயரே இலக்கியங்கள் அனைத்திலும் ஒரு சேர இடம் பெற்றுள்ளது. கடல் அலைகள் வந்து மோதும் இடத்தில் அமைந்துள்ள ஊர் என்ற காரணம் பொருத்தமாகும்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே முருகன் வாழும் திருச்செந்தூரைத் தொல்காப்பியர் 'முருகன் நீம்புனல் அலைவாய்' எனக் குறிப்பிட்டு உள்ளார். சூரபன்மன் முதலான அவுணர்கள் தேவர்கட்கு நாளும் நாளும் தொல்லைகள் தந்தனர். தேவர்களை மீட்பதற்காக முருகப் பெருமான் தன் சேனைகளுடன் தங்கி இருந்த பாசறை இவ்வூர். சூரபன்மனை

அழித்து வெற்றியுடன் திரும்பியபோது தமிழகக்கத்தில் முதன் முதலாக இறங்கிய படைவீடு இதுவே. இதனால் இவ்வூர் செயந்திபுரம் என்னும் பெயர் பெற்றது. பதிற்றுப்பத்து முருகன் சூரனை வென்ற செய்தியைச் 'சூருடை முழுமுத றடிந்த பேரிசைக் கடுஞ்சின விறல் வேள்' எனக் கூறுகிறது. கலித்தொகை கதை 'உரவு நீர் மாகொன்ற வென்வேலான் என்றே கூறும்; அகநானூறு, திருச்செந்தூர் முருகனின் போர்க் குணத்தைத் 'திருமணி விளக்கில் அலைவாய்ச் செருமிகு சேய்' என்றுரைக்கும். புறநானூறு, முருகன் சூரனை வென்றதையும், அவனது வேலைச் சிறப்பித்துக் கூறுவதையும் 'சூர் நவை முருகன்', 'நெடுவேல் நிலைஇய காமாவியன் துறை' எனக் குறிக்கின்றது.

பத்துப்பாட்டில் முதலாவதாக வைத்து எண்ணப்படும் திருமுருகாற்றுப்படை 'உலகம் புகழ்ந்த ஓங்குயர் அலைவாய்' என உலகம் புகழும் திருச்செந்தூரைச் சுட்டுகின்றது. 'செறுநர்த்தேய்த்த செல்சமம் முருக்கி', 'மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து' 'பார் முதிர் பனிக்கட்டில் கலங்கவுள் புக்குச் சூர் முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்' என்னும் செய்யுள் தொடர்களால், முருகன் சூரனை அழித்த செயல்களை அறிய முடிகின்றது. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலம்பில் முருகன் சூரனை அழித்ததைச் 'சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே' எனக் கூறப்பட்டுள்ளதால் அறியலாம்.

கந்தபுராணம் முருகனது ஆற்றலைக் கண்டு ஏழுகடலும் எட்டு மலைகளும் அரக்கர்களும் அஞ்சுகின்றனர் என வேலனின் வேல் ஆற்றலைக் கூறுகின்றது. இதனைச், 'சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்', டீரலை வாயிடு மெஃக மேந்திய, வேரலைவாய் திருவெள்ளி வெற்பென்கிச், சீரலைவாய் வரு சேயைப் போற்றுவோம்' எனப் பகர்கின்றது. பெருங்கதையும் சூரன் மாமரமாக நின்று மாயம் செய்து கடவுளர்களை நாளும் வருத்திய போது முருகன் சினந்து அழித்தான் எனக் குறிப்பிட்டுள்ளது.

பல்லவர் காலம் கி.பி. 600 - 900 வரை. இக்காலம் இலக்கிய வரலாற்றில் பக்திக்காலம் என்று கூறப்பட்டுள்ளது. சைவ இலக்கியங்கள் மலர்ந்த இக்காலத்தில் தேவார மூவரும் பக்திப்பயிர் வளரப் பெரிதும் உழைத்தனர். ஞானசம்பந்தர் சூரனை வென்ற செயலினை, 'மயச்சூர் அன்றறுத்தனன் தாதை',

'சூரட்ட வேலன்' என்னும் வரிகளில் உணர்த்துகின்றார். சுந்தரர் 'கடற்சூர் தடிந்திட்ட சேந்தர்', 'காதலாற் கடற்சூர் தடிந்திட்ட' என்று முருகன் சூரனோடு போரிட்டு வென்றதைக் கூறுவார். திருநாவுக்கரசர் 'சமர்சூர பன்மாவைத் தடிந்தவன்' என்பதால் சூரனை முருகன் வென்றதை அறிய முடிகின்றது. அருணகிரிநாதர் இத்தலத்தில் சந்தனக்காடுகள் நிறைந்திருந்ததைச் 'சந்தனத்தில் பைம்பொழில் தன் செந்திலில் தங்கும் பெருமானே' என்கின்றார். திருச்செந்தூர் சிவனது மலையான கயிலாய மலையை ஒத்திருந்தது என்பதனை' கைலை மலையனைய செந்தில் பதிவாழ்வே' என்பர். சூரபன்மனை அழித்த பின்னர் முருகன் பழமுதிர்சோலைக்கு வந்ததைச் 'சூரர்களை வென்றுவெற்றி பெற்றுச் சோலைமலை வந்தவன்' எனக்கூறுகின்றார்.

தண்டபாணி சுவாமிகள் திருச்செந்திற் பிரபந்தங்கள் எனும் நூலில் வெண்பா அந்தாதியில் 'சூர்மாவிற்பட்டுருவந் தொட்டு, விலங்கொண்டே வேலுடையான் வாழும் - நலங்கொண்ட, செந்திற் பதியிடத்திற் சென்றவனைச் 'செந்திற் பதியானே', 'செந்தூர்க்காவலா', 'செந்தூர் வித்தகனை' என முருகனைப் பாடுகின்றார். இவ்வூரில் கற்றவர்கள் மலிந்திருப்பர். நல்லவர்கள் பலர் வந்தாடுவர், இத்தலத்தில் பன்னீர் இலையில் கொடுக்கப்படும் பச்சிலை விபூதி நோய் போக்கும் ஆற்றல் உடையது. நக்கீரர் பன்னீர் இலையில் தரப்பட்ட நீரினை உட்கொண்டு தமது நோயைப் போக்கிக் கொண்டார் என்னும் வழக்கு உண்டு. தூய கமலத்தடங்கள் சூழ்ந்த திருச்செந்தில், மோதுந்திரைக் கடற்சீர் முத்துதிருச் செந்திரலந்தை, சீர் மருவு, செந்தினகர்' எனத் திருச்செந்தூரின் பெருமை பேசப்பட்டு உள்ளது. 'சந்தன மால்வரைச் செந்தூர்', 'சந்தன வெற்புறு செந்திலிட்திகழ் தனிவேல்,' 'சந்த வரை தாளில் தண்டமிழோர் தங்குழுவில், சந்துமிக வெளிக்கும் செந்தூர்' என்னும் அடிகளில் திருச்செந்தூர் சந்தன மரங்கள் அடங்கிய சந்தனமலைகள் இருந்ததையும், அம்மலை அடிவாரத்தில் தமிழறிஞர்கள் இருந்து கவிதை பாடினர் என்பதும் அறியலாகும் செய்திகள்.

பொன். சு. கனகசபை, திருசெந்தூரகவல் என்னும் நூலில் 'நன்னூர் அலைவாய்ச் செந்தூர்க் கடவுள்,' 'திருச்செந்தூர்ச் சேவற் பெருமான்?' எனக் கந்தனின் இருப்பிடமாக உள்ள

திருச்செந்தூரைக் கூறுகின்றார். அருள்பெற விரும்புவோர் செந்தூர் போகவேண்டும் என்பதனை, 'அருள் பெறல் வேண்டின், ஓகையால் திருச்செந்தூரிடத்து ஏகி' என்பர். இந்நூலைக் கற்போர், கேட்போர், துதிப்போர், பாவம் தீரும், தருமம் மேவும், பில்லி சூனியம் விட்டகலும், வறுமை நீங்கி வாழ்வு பெறுவர். மொத்தத்தில் சாகாவரம் பெறுவர் எனக் கூறுகிறது நூல்.

செந்துறை முத்து, 'திருச்செந்தூர் முருகன்' என்னும் தமது நூலில் விசுவாமித்திரர், ஆதிசங்கரர் ஆகியோர் இத்தலத்திற்கு வந்து முருகனை வணங்கி நோய் நீங்கப் பெற்றனர் என்கின்றார். குமரகுருபரர் ஊமையாக இருந்து முதன் முதலில் பேசியது இத்தலமே. அப்போது பாடியதே 'கந்தர் கலி வெண்பா'. அந்நூலில் முருகனின் தோற்றப் பொழிவு, திருவீதி உலாவருதல், தசாங்க உறுப்புகளை உருவகமாகக் கூறுதல், ஐந்தெழுத்து மந்திரம், ஓதுவார் உள்ளத்தே முருகன் வாழ்வான் எனும் கருத்துக்கள் மிளிர்கின்றன.

'திருச்செந்தில் நீரோட்டகயமக அந்தாதி' எனும் நூலில் சிவப்பிரகாசர், சிவபெருமானையே முழுக்க முழுக்கப்பாடியுள்ள திறம் காணலாம். 'திருச்செந்தூர் முருகன் இறைவிடு அந்தாதி' என்னும் அந்தாதி நூலில் தேவர்களை முருகன் சிறைவிடுத்த செய்தி செந்திற்பதிக்கே உரியது. அனைத்தும் முருகனாகவும் அவனது இயல்புகளாகவும் காணும் உலக நடைமுறையைக் கூறுகின்றார். கந்தசாமிப் புலவர் 'திருச்செந்தூர் நொண்டி நாடகம்' என்னும் நூலை எழுதி உள்ளார். இந்நூல் புராணக் குறிப்புக்களையும், வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்டுள்ளது. 'திருச்செந்தூர் சுப்பிரமணியர் அகவல்' என்னும் நூல் சிற்றம்பல நாடிகளால் இயற்றப்பட்டது; முருகன் சிவனுக்குப் பிரணவ மந்திரம் சொன்னது, நூற்பயன் ஆகியவைகளைக் கூறுகின்றது. 'திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்' எனும் நூல் பகழிக்கூத்தரால் இயற்றப்பட்டது. முருகனின் இளமைக் கால வரலாறுகள், தமிழோடு அவன் கொண்ட தொடர்பு. ஞானசம்பந்தர் முருகன் அவதாரம் என்பன போன்ற செய்திகளைக் கூறுகின்றது. டி.எஸ்.கணபதி சாஸ்திரி 'திருச்செந்தூர் தலபுராணத்தில் முருகனை நிந்தித்த முகமதியன் இத்தலத்தில் இறந்து வீடுபேறு அடைந்ததாகக் கூறுகிறார்.

# தொன்னூல் விளக்கமும் கிலாவிசும்

பேரறிஞர். பெ. சுயம்பு

மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் வீரமாமுனிவர் என்று போற்றப் பெற்ற இத்தாலி நாட்டுச் சமயத்துறவி இயற்றிய தொன்னூல் விளக்கம், கிலாவிசு (CLAVIS) எனும் இரு இலக்கண நூல்களும் இவண் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

11347

### நோக்கம்

தொன்னூல் விளக்கம் 1730-இல் எழுதப்பெற்றது. கிலாவிசு எழுதப்பெற்ற ஆண்டு அறிய இயலவில்லை. தொன்னூல் விளக்கத்தின் பெயரும் (Quare in libro, de quo no supra, தொன்னூல் விளக்கம் dicto (பக்கம் 51) தொன்னூல் விளக்க நூற்பாவும் ('பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளியெட்டே' (பக்கம் 18) சுட்டப் பெற்றுள்ளன. ஆதலால், இது தொன்னூல் விளக்கத்திற்குப் பின்னர் எழுதப்பெற்றது.

"ஒளிவிடா மூடின தீபத்தாற் பயனில்லை யென்றதுபோல முன்னோர் தந்த இலக்கண நூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக் கிடப்ப விக்காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில்லாததற்கொரு பயனுமில்லை. . . . . . செந்தமிழ் மொழியான் மறைத்த விலக்கண நூலை யிளந் தமிழுரையால் வெளிப் பொருளாக்க நினைத்தேனாயினு முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தாலிந்நூலும் பெருகிக் கண்டவரஞ்சித் துணியாரென்று கருதி முனமிகவறிய வேண்டுவ தொன்றைத் தெரிந்து தருவேன்". (தொன்னூல் விளக்கச் சிறப்புப் பாயிர உரைப்பகுதி).

தொன்னூல் இயற்றப் பெற்றதன் நோக்கத்தினைச் சிறப்புப் பாயிர உரையில் முனிவர் சுட்டுகின்றார். முந்தைய இலக்கண நூல்கள் அக்கால மொழி நடையில் எழுதப் பெற்றமையால், இக்காலத்தவர் கற்றற்கு அவை அரியன; அவை விரிவாக உள்ளமை கற்றோரை அச்சுறுத்தும். எனவே, எளிய இக்கால மொழி நடையில் (இளந்தமிழுரை) சுருக்கமாகத் தொன்னூல் எழுதப்பெற்றது. இந்நூல் தமிழ் அறிந்தவர்க்காக எழுதப் பெற்றது.

கிலாவிசு, இலத்தீன் அறிந்த கிறித்துவப் பாதிரிமார்கள் தமிழைக் கற்குமாறு எழுதப் பெற்றது. இது ஐந்தமிழ் இலக்கணத்தையும் இலத்தீனில் விளக்குகிறது.

## நூலமைப்பு

தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கண நூல். தமிழில் நூற்பாவில் இலக்கணத்தைச் சுருங்கக் கூறி, உரையில் விளக்கமாக உரைக்கிறது. கிலாவிசு ஐந்திலக்கணத்தையும் இலத்தீன் மொழியில் கூறுகிறது. தொன்னூல் விளக்கத்தினின்றும் சிறிது சுருக்க நூலாகக் கிலாவிசு விளங்குகிறது.

தொன்னூல் விளக்கம் பொதுப்பாயிரத்தை முதலிற் கொண்டுள்ளது. இது சிறப்புப் பாயிரத்தோடு தொடங்குகிறது. இந்நூலில் 370 நூற்பாக்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் (நூற்பா 1, 41, 143, 201, 301) இறைவனை வாழ்த்தி, நுதலிப் புகுதல் உத்தியுடன் தொடங்குகிறது. இத்தகு தொடக்க நெறி நன்னூலை ஒட்டியமைந்ததாகும்.

கிலாவிசுவில் இறை வாழ்த்து இடம் பெறவில்லை. ஒவ்வோர் அதிகாரத்தின் முகப்பிலும் அவ்வவ்வதிகார இலக்கணம் பற்றிய சிறு குறிப்பும், அதற்கான முதல் நூல் பற்றிய செய்தியும் இடம் பெற்றுள்ளன. எழுத்து, சொல் எனும் இரண்டற்கும் நன்னூலும், பொருளுக்குத் தொன்னூல் விளக்கமும், யாப்பிற்கு யாப்பருங்கலம், யாப்பருங்காரிகை எனும் நூல்களும், அணியதிகாரத்திற்குத் தண்டியலங்காரமும் முதல் நூல்களாகும். ஒவ்வொரு செய்தியும் எண் இடப்பட்டுள்ளது. கிலாவிசின் முகப்பில் விரிவான பொருளடக்கம் (Index) இடம்பெற்றுள்ளது.

## எழுத்ததிகாரம்

தொன்னூல் விளக்க எழுத்ததிகாரம் எழுத்தின் தோற்றம், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விகாரம் எனும் மூன்று இயல்களை (Chapter) உடையது. எழுத்துகளின் பிறப்பினை ஒரு நூற்பாவில் மிகச் சுருக்கமாகப் பொதுப் பிறப்பு என்றவளவில் இந்நூல் கூறுகிறது.

இதன் விரிவையுணர வேண்டில் தொல்காப்பியத்தும் காண்க. அதனினும் விரிவு பேரகத்தியத்தில் காண்க.

எழுத்தின் தோற்றம் (பிறப்பு) பற்றிய செய்தி தொல்காப்பியத்தினும் நன்னூலில் விரிவாக உளதாக முனிவர் கூறுகிறார். நன்னூல் பிறப்பு எனும் பகுதியில் சார்பெழுத்துகளின் வரையறை இலக்கணத்தையும் சேர்த்துக் கூறுவதை, முனிவர் பிறப்பிலக்கணம் என்று கருதுகிறார்.

எழுத்தின் வகுப்பு எனும் இயலில் முதல், சார்பெழுத்துக்களும் அவற்றின் வகைகளும் விளக்கப் படுகின்றன. இதன் இறுதியில் மாத்திரை, உடம்படுமெய் பற்றிய விளக்கம் இடம்பெற்றுள்ளது.

விகாரம் எனும் இயல் எழுத்துகள் புணர்ச்சியில் எய்தும் மாற்றங்களை விவரிக்கிறது.

*திரிபழி வாக்கந்*
*திரட்டுநால் விகாரம் (நூற்பா 21)*

விகாரம் நான்கனுள் திரட்டு என்பது வடமொழி மரபை ஒட்டியது. இதனை வட நூலார் சங்கீர்தம் என்பர்.

கிலாவிசின் எழுத்ததிகாரம் எழுத்தின் வகுப்பு, எழுத்தின் குறுக்கமும் நீட்சியும், எழுத்தின் விகாரம் என்ற மூன்று இயல்களை (Caput) உடையது.

முதல் இயலில் முதலெழுத்து, சார்பெழுத்துகள் பற்றிய அறிமுகம் இடம் பெற்றுள்ளது.

இரண்டாம் இயல், முதலெழுத்துகளின் குறுக்கமும் நீட்சியுமாக அமைந்துள்ள சார்பெழுத்துக்ளை விவரிக்கிறது.

மூன்றாம் இயல் திரிபு, அழிவு, ஆக்கம், திரட்டு எனும் புணர்ச்சி விதிகளை விவரிக்கிறது.

ஆய்தத்தை அடித்தொண்டை ஒலி என்பதும் (பக்கம் 2); இயூகம், இயாழ், இயதி, இயமன் எனும் சொற்களில் உள்ள முன்னொட்டு இகரத்தைக் குற்றியலிகரம் என்பதும் (பக்கம் 4) கிலாவிசிலுள்ள புதிய செய்திகளாகும். இவை தொன்னூல் விளக்கத்தில் இல்லாதவை. ஏனைய இலக்கணம் யாவும் தொன்னூல் விளக்கத்தை ஒத்தவையே.

## சொல்லதிகாரம்

தொன்னூல் விளக்கச் சொல்லதிகாரத்தில் ஐந்து ஓத்துகள் (பகுதிகள்) உள்ளன.

முதலாம் ஓத்து சொற்பொதுவியல், இதில் இயற்சொல், திரிசொல், மூவகை மொழிகள், பகுபதம், பகாப்தம், ஆகுபெயர், திணை, பால், மூவிடம், சாரியைகள் ஆகியன சுட்டப்படுகின்றன.

இரண்டாம் ஓத்து பெயர். இதில் வேற்றுமையியல், பகுபதப் பெயரியல், தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல் (Noun Phrases), சுட்டு வினா எனும் நான்கு இயல்கள் உள்ளன.

வேற்றுமையியலில் எட்டு வேற்றுமைகளின் விளக்கத்தோடு, எல்லாம், ஆ, மா, கோ, தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் எனும் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் புணர்ச்சியும், ஒருமை பன்மை மயக்கமும், மரபு குறித்த விளக்கமும் இடம் பெற்றுள்ளன.

பகுபதப் பெயரியலில் பல்வேறு பகுதிகளும் விகுதிகளும் சுட்டப்படுகின்றன. ந், ஞ் ஆகிய இரண்டும் (இளைஞர், மொழிநர்) காலம் காட்டாத பெயர் இடைநிலைகள் என்று சுட்டப்படுகின்றன. இவை இரண்டும் சாரியைகளே என்பதும், சாரியைகளே இடைநிலைகளாகச் செயற்படுகின்றன என்பதும் வீரமாமுனிவர் கருத்து. மைதுலி, கௌரி போன்ற வடசொற்கள் பகுபதமாக அமையுமாற்றையும் அநீதி, அனகன் போன்ற வடமொழி எதிர்மறைப் பதங்கள் அமையுமாற்றையும் இறுதியில் ஆசிரியர் இணைத்துள்ளார்.

கருமை, செம்மை போன்ற மை விகுதிப் பண்புப் பெயர்களை இந்நூல் பண்புப் பகுதிகளாகக் கருதுகிறது. இக்கருத்து நன்னூல் வழி அமைந்ததாகும்.

தொகை நிலைத் தொடர்மொழிப் பெயரியல் வேற்றுமை முதலிய அறுவகைத் தொகைகள் அமையுமாற்றை விளக்குகிறது. இன்னும் இதில் ஈறுபோதல் முதலிய பண்புப் பெயர்ப் புணர்ச்சி விதிகள், எண்ணுப் பெயர்களோடு எண்ணுப் பெயர்கள் சேர்ந்து

பண்புத் தொகை அமைதல், அளவுப் பெயர்களோடு பொருட்பெயர்கள் சேர்ந்தமையும் பண்புத் தொகை, திசைப் பெயரோடு, பிற பெயர்கள் சேர்தல் ஆகிய தொடரமைப்புகளும் விவரிக்கப்படுகின்றன.

ஒரு பெயரை விளக்குமிடத்து, அப்பெயர் தொடரமைப்பின்போது ஏற்கின்ற புணர்ச்சி விதிகளையும் ஒருங்கிணைத்துக் கூறும் நெறி தொன்னூல் விளக்கத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நெறி நன்னூலினின்று வேறுபட்டது.

சுட்டு வினா எனும் இயல் அவ்விருவகைப் பெயர்களின் அமைப்பினையும் அவற்றுக்கான புணர்ச்சி விதிகளையும் கூறுகிறது.

மூன்றாம் ஒத்து வினைச்சொல்லியல். இதில் முக்கால முற்றுவினை, ஏவல் வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு, (Defective verbs) ஆகிய பிரிவுகள் உள்ளன.

எதிர்மறை வினைகள் இடைநிலை இன்றி, விகுதியைப் பெற்று அமையும் எனும் விதி (நூற்பா 112) தொன்னூல் விளக்கத்தில் குறிப்பிடத்தக்க ஒன்று. இது தரும் விகுதிகளுள் 'ஆது' என்பது உண்மையில் எதிர்மறை இடைநிலையும் (ஆ) விகுதியும் (து) சேர்ந்த கூட்டு வடிவமாகும்.

*மேலே பெயர்ப்பகுபதங்களை விளக்கிய விடத்தில்*
*அவையெலா மற்றைப் பெயர்களைப் போலே*
*வேற்றுமை யுருபு பெறுவனவன்றியே வினையைப்*
*போல நடப்பனவா மென்பதாயிற்று, அங்ஙன*
*நடப்புழி வினைக்குறிப்பெனப்படும். இவையே*
*பெயரியலிசைத்த சொல்லாயினும் வினையின்*
*றொழிலைக் குறிப்பனவும் வினையைப் போல*
*நடப்பனவு மாகையில் வினையை விளக்கிய*
*விடத்து வந்த முறையெனக் காண்க (நூற்பா உரை 123)*

இது வினைக்குறிப்பு பற்றிய முனிவரது விளக்கம்.

இடைச்சொல்லியல் ஏ, ஓ, என, உம், அத்து, அந்தில் போன்ற இடைச்சொற்கள் தொடரில் வரும் பொருள்களைச் சுட்டுகிறது.

உரிச்சொல்லியல், நன்னூல், தொல்காப்பியம் எனும் இருநூற் கருத்துகளின் தொகுப்பாக உளது. செய்திகளை விரிவாகத் தருகிற உரை நன்னூல், தொல்காப்பிய நூற்பாக்களையும் மேற்கோளாகச் சுட்டுகிறது. உரிச்சொல்லை அடைமொழி (attributive) என்று தொன்னூல் விளக்கம் கருதுகிறது.

கிலாவிசிலும் தொன்னூல் விளக்கத்தில் உள்ளது போன்று ஐந்து பெரும் பிரிவுகள் (CAPUT) சொல்லதிகாரத்தில் உள்ளன. அவை: 1. சொல் - பொது (DE VOCIBUS IN GENERE), 2. பெயர் (DE NOMINE), 3. வினை (DE VERBO), 4. இடைச்சொல் (PARTICULAE), 5. உரிச்சொல் (ADVERBIA)

தொன்னூல் விளக்கச் செய்திகள் சுருக்கமாகக் கிலாவிசில் தரப்பட்டுள்ளன.

தொன்னூல் விளக்கத்தின் பகுபதப் பெயரைக் கிலாவிசு குறிப்புப் பெயர் (NOMINA APPELLATIVA) என்று சுட்டுகிறது. இரு நூல்களும் வினைக் குறிப்பைப் பெயரியலில் பெயர் என்றும், வினையியலில் வினை என்றும் குறிப்பிடுகின்றன. இவ்வகைச் சொற்கள் உண்மையில் பெயர்களே என்றும், இவை மூவிடவிகுதி ஏற்றுப் பயனிலையாகச் செயலாற்றுதலால் வினையாகவும் கருதப்படுகின்றன என்றும் முனிவர் கருதுகின்றார். வினைக் குறிப்புச் சொற்கள் ஏவலாக வருதல், வியங்கோள வருதல், எதிர்மறை ஏலாமை போன்ற வினைச் சொற்களின் பண்புகளை ஏற்பதில்லை. இதனால் இவற்றை குறைவினை (Defective verb) என்றும் தொன்னூல் விளக்கம் குறிப்பிடுகிறது.

இரட்டைப் பன்மை விகுதி பெற்ற வினை முற்றுக்களைக் கிலாவிசு கூறுகிறது (பக்கம் 35)

***வந்தனங்கள், வந்தாங்கள், வந்தனெங்கள்,***
***வந்தோங்கள், வந்தனீர்கள், வந்தீர்கள்,***
***வந்தனர்கள், வந்தார்கள்***

இவற்றுள் வந்தனங்கள், வந்தனெங்கள், வந்தோங்கள், வந்தனீர்கள், வந்தனர்கள் என்பன பேச்சு வழக்கிலோ இலக்கியங்களிலோ காணப்பெறாதவை. வந்தாங்கள், வந்தீர்கள், வந்தார்கள் மூன்றும் பேச்சு வழக்கில் காணப்படுகின்றன. கிலாவிஸ் எழுத்து மொழிக்கு இலக்கணம் கூறும் நூல்; ஆயினும் பேச்சு வழக்கினையும் இந்நூல் தரவாக ஏற்றுளது என்பதனை இது புலப்படுத்துகிறது.

உரிச்சொல்லைக் கிலாவிசு வினையடை (ADVERBIA) என்று சுட்டி, நனி நயந்தான், கடிபோயினான், சால வாழ்வான் என்று எடுத்துக்காட்டுகிறது. இது தொன்னூல் விளக்கத்தினின்றும் மாறுபட்ட கருத்தாகும். அந்நூல் உரிச்சொல்லைப் பெயரடையாகவும் வினையடையாகவும் கொண்டு, அடைமொழி என்று கருதுகிறது.

## பொருளதிகாரம்

தொன்னூல் பொருளதிகாரச் செய்திகளைப் பதிகம், காரணம், விரிவு, தொகையும் துணிவும், உரிமை ஆகிய ஐந்து ஓத்துகளில் கூறுகிறது.

பொருளதிகாரச் செய்திகள் ஏனைய தமிழ் இலக்கண நூல்களிலிருந்து வேறுபட்டவை. இதனை முனிவரே பின்வருமாறு கூறுகிறார்:

> *புலவரானுரைக்கத் தகும் பொருளாவன: - அறம், பொருள், இன்பம், வீடு, என நான்கு. இவற்றுட் பொருணூற்றந்த செந்தமிழுணர்ந்தோர் மற்றையாவுமொழிய அகப்பொருளெனச் சிற்றின்பமொன்றையும் புறப்பொருளெனப் படைச் சேவகமொன்றையும் விரித்துரைத்தார். அங்ஙனம் பொதுப்படாதுரைத்த நூல் சிறுபான்மையாகயின் இங்ஙனம் அறமுதனான்கிற் கேற்பப் பொது நூலாக விவ்வதிகார முடியுமெ... கொள்க. (உரை 144)*

ஒழுக்கம், வழக்கு, தண்டம் எனும் அரசியற் பொருளையும் முனிவர் இங்குச் சுட்டுகின்றார்.

உரிமை எனும் ஒத்து விரிவாக இடம் பெற்றுள்ளது. காலவுரிமை, இடவுரிமை, பண்புரிமை, ஒழுக்கவுரிமை, சொல்லுரிமை என்று ஐந்து வகையாக உரிமை விவரிக்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட பருவம், குறிப்பிட்ட பொழுது (நாளின் கூறு) ஆகியவற்றிற்கு உரிய காலச்சூழல், தாவரம், விலங்கு, பறவை, தொழில் போல்வன காலவுரிமையாகக் குறிக்கப் பெற்றுள்ளன. ஐந்து திணைகளுக்கும் உரிய கருப்பொருள்கள் இடவுரிமையாகும். நால்வகைச் சாதி மாந்தர்க்குரிய உரிமைகள் பண்புரிமையில் இடம் பெற்றுள்ளன.

வடமொழிச் சொற்கள், செந்தமிழ்ச் சொற்கள் ஆகியவற்றுடன் புறத்திணைச் செய்திகளும் சொல்லுரிமையில் அடக்கப் பெற்றுள்ளன. புறப்பொருள் வெண்பா மாலை நூற்பாக்கள் உரையில் எடுத்தோதப்பட்டுள்ளன.

கிலாவிசு பொருளிலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறுகிறது. இந்நூல் தொன்னூல் விளக்கத்திலுள்ள உரிமையோத்துச் செய்திகளை மட்டுமே சுருக்கித் தருகிறது. இங்குப் புறப்பொருள் வெண்பா மாலை நூற்பாக்கள் வழிமொழியப்படவில்லை.

## யாப்பதிகாரம்

தொன்னூல் விளக்கம் செய்யுளுறுப்பு, செய்யுளியல், செய்யுண்மரபியல் எனும் மூன்று ஒத்துகளுடன் யாப்பதிகாரத்தை அமைத்துள்ளது.

செய்யுளுறுப்பு, செய்யுளியல் ஆகிய இரண்டும் யாப்பருங்கலம், காரிகை ஆகியவற்றை வழி மொழிகின்றன. செய்யுள் மரபியல் தண்டியலங்காரத்தின் முத்தகம், குளகம், பெருங்காப்பிய இலக்கணங்களை முதலில் கொண்டு, பாட்டியல் செய்திகளை விரிவாக எடுத்துரைக்கிறது.

கிலாவிசு செய்யுளுறுப்பு, செய்யுளியல், பாவினம், பாட்டியல் ஆகிய நான்கு இயல்களில் யாப்புச் செய்திகளைத் தருகிறது. தொன்னூல் விளக்கத்தின் செய்யுளியல் இந்நூலில் செய்யுளியல், பாவினம் என்று பகுக்கப்பட்டுள்ளது.

## அணியதிகாரம்

அணியிலக்கணம் சொல்லணியியல், பொருளணியியல் என இரண்டாகப் பகுத்துத் தொன்னூல் விளக்கத்திற் விவரிக்கப்படுகிறது.

கிலாவிசும் சொல்லணி (DE TROPIS SEU), பொருளணி (DE FIGURIS SENTENTIARUM) என இரு இயல்களாகப் பகுத்து, தொன்னூல் விளக்கச் செய்திகளை வழி மொழிகிறது.

தொன்னூல் விளக்கத்திற்குப் பின்னர்க் கிலாவிசு இலத்தீனில் எழுதப்பெற்றது. தமிழ் இலக்கணத்தை எளிய நடையில் தரும் நோக்கத்தில் தொன்னூல் விளக்கம் எழுதப் பெற்றது; அதனை இலத்தீன் அறிந்தவர் கற்குமாறு கிலாவிசு எழுதப் பெற்றது. இரு நூல்களும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கணங்களையும் கூறுகிறது. ஆறாவதாய பாட்டியலைச் செய்யுள் இலக்கணத்துள் அடக்கியுள்ளன. கிலாவிசு தொன்னூல் விளக்கத்தின் சுருக்க இலத்தீன் மொழி பெயர்ப்பு நூலாக விளங்குகிறது.

*"நிச்சயம் அன்றுஎனின் நெடிதுநாள் உண்ட*
*எச்சிலை நுகருவது இன்பம் ஆகுமோ ?"* - *கம்பர்*

(அரச இன்பம் நிலையற்றது; நெடுநாள் துய்த்துவிட்ட அப்பதவி எச்சிலைப் போன்றது. அது இன்பம் தருமோ? தாராது)

# இயற்கைக் கருவூலங்கள்

## பொறியாளர் க.சி. அகமுடை நம்பி

***காற்று:***

இந்த நிலவுலகம் ஏறத்தாழ 13000 கிலோ மீட்டர் குறுக்களவுள்ள ஓர் உருண்டையாகும். இவ்வுருண்டையின் உட்பகுதி சூடான குழம்பு உருவத்தில் உள்ளது. உருண்டையின் மேற்பரப்பு ஓடுபோல் அமைந்துள்ளது. இம்மேலோட்டின் ஆழம் சில கிலோ மீட்டரேயாகும். ஒரு முட்டைக்கு சிறிதே கனமுள்ள ஓடு அமைந்துள்ளது. நிலவுலகை முட்டையோடு ஒப்பிட்டால், முட்டைக்கு அமைந்து இருப்பதைவிட நிலவுலகின் ஓடு மெல்லியது என்றே சொல்ல வேண்டும். இத்தகைய மேல் ஓட்டின் முக்கால் பாகத்தில் நீர் மூடிக் கிடக்கிறது. மீதிக் கால் பாகம் நிலப்பகுதியாக உள்ளது. நீரால் ஆன ஆழியும், நிலப்பரப்பும் காற்றுக்கடலால் சூழப்பட்டுள்ளன. காற்றுக் கடலை காற்று மண்டலம் என்று குறிப்பிடுகின்றோம்.

இந்தக் காற்று வெளியில் நாம் வாழ்ந்து வருகிறோம். நீலக்கடலில் மீன்கள் நீந்திச் செல்வது போல, காற்றுக் கடலில் நாம் உலவி வருகிறோம். நம் செயல்கள் யாவும் காற்றின் இயக்கத்துக்கு உட்பட்டவை. மனித இனம் உட்பட நிலத்தில், ஆழியில் வாழ்கின்ற அனைத்துயிர்களின் வாழ்வும் காற்றையே சார்ந்துள்ளன. உயிரினங்கள் மூச்சுவிடக் காற்று வேண்டும். அதுவும், ஒரு குறுகிய வரம்பிற்கு உட்பட்டதாய்க் காற்றின் நிலை இருப்பதைப் பொறுத்தே உயிரினங்களின் வாழ்வு உள்ளது.

காற்றில் நீராவி இருக்கிறது. தட்ப வெப்ப நிலையைப் பொறுத்து நீராவியின் அளவு மாறுபடும். நீராவி தவிர, காற்றில் பெரும்பான்மையாக உள்ளது வெடியம் (நைட்ரஜன்) என்னும் மூலகம். இது 78 சதவிகிதத்திற்கும் சிறிது அதிகமாக உள்ளது. ஏறத்தாழ 21 சதவிகித அளவு உயிர்க்காற்று (பிராண வாயு) உள்ளது. மீதமுள்ள ஒரு சதவிகிதத்தில் பிற வாயுக்கள் உள்ளன. கரியமில வாயு, ஆர்கான், நியான், கிரிப்டான், செனான்,

ஹீலியம், இரேடான், மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கள் அனைத்தும் அடங்குகின்றன.

வெடியம், உயிர்க்காற்று, கரியமில வாயு இம்மூன்றும் பல்வேறு வகைகளில் இணைகின்றன. இம்மூன்றும் நிலையற்ற அங்கக உலகத்திற்கும், மாறான சமன நிலையில் விளங்கும் அனங்ககத் தன்மைக்கும் இடையே பல்வேறு உருக் கொள்கின்றன. அவ்வுருக்கள் மீண்டும் மீண்டும் தோன்றி மறைந்து, சகடம்போல் சுழன்று வருகின்றன. இச்சுழற்சி முடிவில்லாமல் தொடர்ந்து நடைபெறுகிறது. இம்மூன்று வாயுக்களின் மேன்மையான கூட்டுறவினால் ஏற்படும் நன்மை, மண்ணுலகில் உயிரிச் செல்வம் குறையாமல் பாதுகாப்பதாகும். உயிரினம் நீடித்து நிற்க அது உதவுகிறது.

பூமி மட்டத்திற்கு அருகில் உள்ள காற்றில் எப்போதும் கண்ணுக்குத் தெரியாத ஆவி உருவில் நீர் இருக்கிறது. இந்த நீரின் அளவு சுமார் பத்து நாட்களில் கொள்முதல் செய்யக் கூடியதாக இருக்கும். அதற்கு மேல் அதிகமாக நீரை வைத்துக் கொள்ளக் காற்றால் இயலாது. எனவே, கடல், ஏரிகள், ஆறுகள் முதலியவற்றிலிருந்து நீர் ஆவியாகச் செல்வது தொடர் செயலாக இருக்க வேண்டுவது இன்றியமையாதது.

வெப்ப நிலை அதிகமாயிருக்கும் போது, காற்றும் அதிகமான நீரைக் கொண்டிருக்கும். அச்சமயத்தில் பெரிய நீர் நிலைகளை அடுத்திருக்கும் காற்றில் மிகுதியான நீர் சேர்வது இயல்பு. வெப்பம் குறையுமாயின், காற்றிலுள்ள நீரின் எடை குறைக்கப்பட வேண்டிவரும். இவ்வாறு, காற்றிலிருந்து நீர் கழியும் போது, மழை ஆலங்கட்டி, பனி, பனிமூட்டம், தூள்பனி முதலிய உருவங்களில் வெளியேறும். ஆகவே, தட்ப வெப்ப நிலை என்பது பெரிதும் காற்றில் நீராவி கூடுதல், குறைதல் இவற்றால் விளைவதேயாகும். சூரியனின் ஒளியையும் வெப்பத்தையும் நாம் ஓரளவே பெறுகின்றோம். உண்மையில், மிகுந்த வெப்பத்தையும் வெளிச்சத்தையும் ஞாயிறு வீசுகிறது. அவை முழுவதும் அப்படியே மண்ணுக்கு வருமானால், இவற்றின் கடுமையை நம்மால் தாங்க முடியாது. தவிரவும்,

ஞாயிறு புற ஊதாக்கதிர்களை வீசிய வண்ணம் உள்ளது. அக்கதிர்கள் பெரிதும் ஆபத்தானவை; நம்மைக் கொன்றுவிடக் கூடியவை. அளவு கடந்த ஒளி, வெப்பம், புற ஊதாக் கதிர்கள் இவற்றைக் காற்று வடிகட்டி, போதுமான அளவே பூமியை அடையுமாறு சிறந்த பணி புரிகிறது. ஊடுருவிப் பாய்ந்து ஊறு விளைவிக்கக் கூடிய பரந்த. கதிர்களையும் (cosmic rays) அது தடுத்து நிறுத்துகிறது. நமக்கு இயற்கை தந்துள்ள முக்கிய காப்பு, காற்று. அதனை நாம் உணர்ந்து போற்ற வேண்டும்.

இக்காற்று நமக்கு இயற்கை அளித்துள்ள பெருங் கருவூலமாகவும் விளங்குகிறது. தாவரங்கள் காற்றிலிருந்து பெறுகின்ற கரியைச் சேமித்து வைக்கின்றன. அத்தாவரங்கள் மண் மூடிப்போய்ப் புதையுண்டு. காலங்காலமாய்க் கிடந்து நிலக் கரியாக மாறுகின்றன. அக்கரியிலிருந்து பாறை எண்ணெய் (பெட்ரோலியம்) உண்டாகிறது. ஆதியில் தாவரங்கள் காற்றுக் கருவூலத்திலிருந்து கரியை நிலக்கரியாகவும், பாறை எண்ணெயாகவும் நமக்குக் கிடைக்க உதவுகின்றன. அவற்றை எரித்து ஆற்றலைப் பெற்றிட, உயிர்க்காற்று தேவை. அது இல்லையென்றால் அப்பொருள்களைப் பயன்படுத்த முடியாது.

உலகின் மேற்பரப்பில் இரண்டிடங்களில் தட்ப வெப்பநிலை வேறுபாடு நிலவும்போது. அங்குக் காற்று எழுகிறது. அவ்விடங்களுக்கு மேலேயுள்ள காற்றிலும் அத்தகைய வேறுபாடு உண்டாகும். வேறுபாட்டு நிலையின் விளைவாகக் காற்றின் ஓட்டம் நிகழும். உலகின் மாறுபட்ட வெப்ப நிலைகள் ஆங்காங்கு உண்டாவது எப்போதும் நடக்கக் கூடியது. எரிக்கும் ஞாயிற்றை உலக உருண்டை சுற்றி வருகையில், ஞாயிற்றை நோக்கியுள்ள பக்கம் அதிகச் சூடு பெறும். மறுபக்கம் சூடற்று குளிர்ச்சியாக இருக்கும். உலகம் இவ்வாறு சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் வரை, ஒரு பக்கம் வெப்பமும் ஒரு பக்கம் குளிர்ச்சியுமாக, வேறுபட்ட வெப்ப தட்ப நிலை தொடர்ந்து இருந்துவரும்.

(தொடரும்)

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில்
அறிமுகப்படுத்தும்

# மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள
அரிய வாய்ப்பு

## திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்த பரிசோதனை
   ★ இரத்த வகை
   ★ சர்க்கரை அளவு
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.
   ★ சீரம் கிரியேட்டினைகள்
   ★ கொலஸ்ட்ரால் அளவு

## கூடுதல் பலன்கள்

★ இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
★ இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு பார்த்தல்
★ இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்கள் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

## இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

**பெண்களுக்கு:** பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50 செலுத்த வேண்டும்.

தொடர்புக்கு

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை
# மற்றும் ஆராய்ச்சி மையம்

Only private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O. Ms. No. 4901/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.
Ph : 536361 (8 Lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்



அன்பு அச்சகம், மதுரை - 1.